பக்கங்கள்:-26

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆடி 13 | செவ்வாய்க்கிழமை | 29.07.2025 | அதிர்வு 359 |
|---|---|---|---|---|---|

## ஸ்கான் பரிசோதனை செம்மணியில் தாமதம்

(விரிவான செய்தி 3 ஆம் பக்கம்)





# செம்மணி அகழ்வுக்கு சர்வதேச நிபுணர்களை அழைப்பது அவசியம்!

## அங்கு வைத்து சுமந்திரன் தெரிவிப்பு



(பிரபாகரன் டிலக்சன், நா.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

**“செம்மணி அகழ்வு நடவடிக்கைகளின் போது நிபுணத்துவமுடைய சர்வதேச மேற்பார்வையாளர்களை வரவழைக்க வேண்டும் என்று இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். இந்த விடயங்களைச் சரியான முறையில் ஆராய்ந்தாலே நாட்டில் நடைபெற்ற பலவிதமான சர்வதேசக் குற்றச் செயல்களுக்கான சாட்சியங்கள் வெளிவரும்.”**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

06▶




நல்லைக் குமரனின் கொடி இன்று ஏறுகிறது. அடுத்த 25, 26 நாள்கள் முழு யாழ்ப்பாணமுமே முருக பக்தியில் மூழ்கிவிடும். நல்லூரானின் திருவிழா என்பது குடாநாட்டுக்கு மாத்திரமானதன்று. அது ஒரு வகையில் தமிழரின் தேசியத் திருவிழாவும் கூட. கடல் கடந்த தேசங்களில் இருந்தும் பல்லாயிரக் கணக்கானோர் யாழ்பாணத்தில் வந்து கூடுவர். நல்லூரானே அவர்களை இணைக்கும் ஒரே சக்தி.

நல்லூர் திருவிழாவிற்கு என – குறிப்பாக பெரும் திருவிழாவுக்கு என – பல லட்சம் பேர் நல்லூரானின் சுற்றாடலில் ஒன்று திரள்வர்.

அந்தப் பக்க கோடிகளுக்கான நலனைக் கவனிப்பது என்பது மிகச் சிக்கலான விடயம். அதிலும் அவர்களின் பாதுகாப்பு என்பது மிக முக்கியமான அம்சம்.

பல லட்சம் பேர் ஓரிடத்தில் கூடும்போது ஏற்படக்கூடிய அனர்த்தங்களைச் சமாளிக்கத்தக்க விதத்தில் ஏற்பாடுகள் இருப்பது மிக முக்கியம்.

இப்படிப் பல லட்சம் பேர்

06▶



# செம்மணிப் புதைகுழியில் நேற்று 3 எலும்புக்கூடுகள் அடையாளம்!

## அகழ்வுப் பணியை நேரில் பார்வையிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின் போது புதிதாக மூன்று என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டன. மேலும் நேற்றைய அகழ்வுப் பணியை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கே.சயந்தன் ஆகியோர் நேரில் வந்து பார்வையிட்டனர்.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 23ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது மூன்று மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன. ஒரு மனித என்புத் தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 104 என்புத் தொகுதிகள் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 96 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக் குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ஞா.ரனிதா, சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியல் துறை மாணவர்கள் நேற்றைய அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி இருந்தனர்.

மேலும் யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கே.சயந்தன் ஆகியோர் நேற்றைய அகழ்வுப் பணிகளின் முன்னிலையானமை குறிப்பிடத்தக்கது.














# ஸ்கான் பரிசோதனை செம்மணியில் தாமதம்

## பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை

**(பிரபாகரன் டிலக்சன்)**

மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தை ஸ்கான் பரிசோதனை மேற்கொள்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இன்னும் கிடைக்காத காரணத்தால் ஸ்கான் பரிசோதனை தாமதமடைந்துள்ளது.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தின் அபிவிருத்திப் பணிகளின் போது மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவுக்கமைய இதுவரை மொத்தமாக 32 நாட்கள் இடம்பெற்ற அகழ்வுப் பணிகளில் 104 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்நிலையில் மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட சித்துப்பாத்தி இந்து மயான எல்லையைச் சூழ ஸ்கான் பரிசோதனை மேற்கொள்வதற்கான முதல் கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை துப்பரவுப் பணிகள் இடம்பெற்றன.

நேற்று திங்கட்கிழமை ஸ்கான் பரிசோதனை மேற்கொள்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கப் பெறும் என எதிர்பார்த்தபோதும் நேற்று மாலை வரை அனுமதி கிடைக்கவில்லை. இதனால் ஸ்கான் பரிசோதனை தாமதமடைந்துள்ளது.

# செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 54 சான்றுப்பொருள்கள்




**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது 54 சான்றுப் பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு நீதிமன்றத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் முதலாம் கட்டமாக 9 நாட்கள் இடம்பெற்ற அகழ்வு மற்றும் இரண்டாம் கட்டமாக 23 நாட்கள் (நேற்று வரை) இடம்பெற்ற அகழ்வில் 54 சான்றுப்பொருட்கள் அடையாளம் காணப்பட்டு நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

# புலம்பெயர வேண்டாம் என்று வடக்கு, கிழக்கு தமிழர்களை கேட்கும் துணிச்சல் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இருக்கின்றதா?

## வெலிக்கடைச்சிறை படுகொலைகள் நினைவேந்தல் நிகழ்வில் தனபாலசிங்கம் கேள்வி



(எஸ்.தில்லைநாதன்)

"வெளிநாடுகளுக்குத் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து கொண்டிருப்பதால் வடக்கு மாகாணம் இலங்கையில் சனத் தொகையில் மிகவும் குறைந்த மாகாணமாகிவிட்டது. அடுத் தடுத்த தேர்தல்களில் வடக்கில் வாக்காளர்களின் தொகை மேலும் குறைவடையும் ஆபத்து இருக்கின்றது." – என்று எச்சரிக்கை செய்திருக்கும் சிரேஷ்ட ஊடகவியலாளர் வீரகத்தி தனபாலசிங்கம், மண்ணைக் காப்பாற்ற வேண்டும் என்று உரத்துக்குரல் கொடுக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை புலம்பெயர வேண்டாம் என்று கேட்கும் துணிச்சல் இருக்கின்றதா என்று கேள்வி எழுப்பினார்.

தமீழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கடந்த சனிக்கிழமை மாலை யாழ். நகர் தந்தை செல்வா கலையரங்கத்தில் ஏற்பாடு செய்திருந்த கறுப்பு ஜூலை வெலிக்கடைச் சிறை தமிழ்க் கைதிகள் படுகொலை நினைவேந்தல் – தமிழ்த் தேசிய வீரர் கள் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், தொடர்ந்தும் சொந்த மண்ணில் வாழ்ந் தால் தங்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கும் என்று தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய அர சியல் கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் இனிமே லாவது கடைப்பிடித்து தமிழ் அரசியல்வாதிகள் கற்பனா வாத சுலோகங்களை விடுத்து நடைமுறைச் சாத்தியமான பாதையைக் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண் டார்.

ரெலோ இயக்கத்தின் பேச்சாளர் சுரேன் குருசாமி தலை மையில் நடைபெற்ற நிகழ்வில் தனபாலசிங்கம் மேலும் பேசியதாவது:–

"வெறுமனே தேசியவாத சுலோகங்களை எழுப்புவ தன் மூலம் தமிழ் மக்களின் நம்பிக்கையை தமிழ் அரசி யல்வாதிகளினால் இனிமேலும் வென்றெடுக்க முடியாது. உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பின்னரான கடந்த 16 வருடங் களாக தமிழ்க் கட்சிகளின் செயற்பாடுகளில் வெறுப்படைந்த காரணத்தினாலேயே தமிழ் மக்கள் கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு பெருமளவில் வாக்களித்தார்கள்.

தமிழ் மக்கள் தங்களுக்கு வாக்களித்ததன் உண்மையான காரணத்தைப் புரிந்துகொண்டு அவர்களின் பிரச்சினை களை தீர்ப்பதில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் அவரது அரசு அக்கறை காட்டியிருந்தால் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளினால் மீண்டும் அவற்றின் செல்வாக்கை அதிகரிக்க முடியாமல் போயிருக்கும். தங்களது வாக்கு வங்கிக்குள் ஊடுருவல் செய்த காரணத்தினாலேயே ஜனாதிபதியையும் தேசிய மக்கள் சக்தியையும் தமிழ் அரசி யல்வாதிகள் கர்ணகடூரமாகத் தாக்கிப் பேசுகின்றார்கள். தேசிய மக்கள் சக்திக்குத் தமிழ் மக்கள் வாக்களித்ததன் காரணத்தைத் தமிழ் அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாடு பூராகவும் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட 1983 ஜூலை இனவன்செயல்களின் 42 ஆவது வருடாந்தத்தை நாம் நினைவுகூர்ந்து கொண்டிருக்கிறோம். அந்த வன்செயல் நாட்களில் வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்க் கைதிகளுக்கு அஞ்சலி செலுத்துகின்றோம். அந்தப் படுகொலைகள் குறித்து நாடா ளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பிரச்சினை கிளப்பியபோது அன்றைய பிரதமர் ரணசிங்க பிரேமதாஸ சிறைச்சாலை வன்முறைகளில் சிங்களக் கைதி ஒருவரும் கொல்லப்பட்ட தாகப் பொறுப்பற்ற விதமாகப் பதிலளித்தார்.

1983 ஜூலையை கறுப்பு ஜூலை என்று வர்ணித்தவர் காலஞ்சென்ற பிரபல ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் மேர்வின் டி சில்வா. அவர் அவ்வாறு வர்ணித்த அதே வேளை அந்த ஜூலைக்குப் பிறகு இலங்கையில் எல்லாமே கறுப்பாகத்தான் இருக்கின்றது என்று எழுதிய சிங்களப் பத்திரி கையாளர்களும் இருந்தார்கள்.

கிறிஸ்துவுக்குப் பின், கிறிஸ்துவுக்கு பின் என்பதைப் போன்று இலங்கையின் அரசியல் வரலாறும் கறுப்பு ஜூலைக்கு முன், கறுப்பு ஜூலைக்கு பின் என்று பிரித்துப் பார்க்கப்படு கின்றது.

ஜே.ஆர். ஜெயவர்தனவின் அரசின் முழுமையான ஒத்துழைப்புடன் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அந்தக் கொடூரமான வன்செயல்கள் இலங்கை யில் இனங்களுக்கு இடையிலான உறவுகளைப் பொறுத்த வரை ஓர் எல்லைக்கோடாக அமைந்தன.

கறுப்பு ஜூலை வன்செயல்களில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். கோடிக்கணக்கான அவர்களது சொத்துக்கள் அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கில் தமி ழர்கள் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்தார்கள். தமிழ் அரசியல்வாதிகளின் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கைக்குச் சிங்கள மக்கள் வெளிக்காட்டிய இயல்பான எதிர்வினையே அந்த வன்செயல்கள் என்று கூறி ஜனாதிபதி ஜெயவர்தன நியாயப்படுத்தினார்.

கறுப்பு ஜூலையில் அவலங்களை அனுபவித்த தமிழ் மக்களிடம் அன்றைய அரசின் எந்தவொரு தலைவரும் மன்னிப்புக் கோரியதும் இல்லை, வருத்தம் தெரிவித்ததும் இல்லை.

கறுப்பு ஜூலைக்குப் பிறகு இலங்கை இனப் பிரச்சினை யில் இந்தியா நேரடியாகத் தலையிட்டது. 1987 ஜூலை இந்திய – இலங்கை சமாதான உடன்படிக்கையை அடுத்து மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால், இந்தி யாவின் அந்த தலையீட்டினதும் மாகாண சபைகளி னதும் இன்றைய நிலையை தமிழ் மக்களும் அவர்க ளின் அரசியல்வாதிகளும் நினைத்துப் பார்க்க வேண் டும்.

மாகாண சபைகளுக்கு எட்டு வருடங்களாகத் தேர்தல் நடத்தப்படவில்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்தி அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசுகளை இந்தியா வினால் கூட வழிக்குக் கொண்டுவர முடியவில்லை. இறுதியில் மாகாண சபைகள் கூட இல்லாத ஒரு மக்கள் கூட்டமாக தமிழ் மக்கள் அநாதரவாக விடப்படக்கூடிய ஆபத்து இருக்கின்றது. தற்போது இலங்கை அரசமைப்பில் இருக்கின்ற ஒரேயொரு அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாடான மாகாண சபையைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்று வதற்குத் தமிழ்க் கட்சிகள் இயன்ற வரை முயற்சிக்க வேண் டும்.

பதின்மூன்றாவது திருத்தமும் மாகாண சபைகளும் இல்லாமல் போனால் மீண்டும் அத்தகைய ஓர் அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாட்டை அல்லது அதை விடவும் குறைந்த ஓர் ஏற்பாட்டையாவது மீண்டும் கொண்டு வருவதற்கு அரசுக்கு நெருக்குதல் கொடுக்கக்கூடிய மக்களின் போராட்டத்தை முன்னெடுக்கக் கூடிய வல்லமை இன்றைய தமிழ்க் கட்சி களிடமும் அவற்றின் தலைவர்களிடமும் இருக்கின்றதா?" – என்று கேள்வி எழுப்பினார்.



# பேச்சி அம்மனின் தெப்பத் திருவிழா

மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலயத்தின் நான்காவது வருடாந்த மகோற்சவத்தின் விசேட திருவிழாவாக இளைஞர் திருவிழாவான தெப்பத்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை சிறப்பு நிகழ்வுகளுடன் இடம் பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு பேச்சி அம்பாளுக்கு விசேட வழிபாடுகள் நடைபெற்று, வசந்த மண்டபப் பூசையினைத் தொடர்ந்து மேடை நிகழ்வுகள் மாலை 6.30 மணியளவில் ஆரம்பமாகும்.

மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய அருள்மிகு பேச்சிஅம்மன்ஆலயவருடாந்தமஹோற்சவ தெப்ப திருவிழாவை சிறப்பிக்கும் வகையில் திருப்பூர் ஒன்றிய இளைஞர்களின் நேரடி நெறியாள்கையில் வங்கக் கடலிலே கடல் அசைவுக்கு ஏற்ப அசையக்கூடிய வடிவமைக்கப்பட்ட அலங்கரிக்கப்பட்ட மேடையில் தமிழர் பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதன்போது, மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய கல்வி நிலைய மாணவர்களின் கலை நிகழ்வுகள், இந்தியாவின் முன்னணி வித்துவான்கள் கலந்து சிறப்பிக்கும் கம்பீரஷேத்ர மேள (பஞ்சாரி மேளம்) இசைச்சங்கமம், சாவகச்சேரி “நர்த்தனாவயா” நடனக்குழுவினர் வழங்கும் நடன நிகழ்வுகள், மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய இளைஞர்கள் சிறப்பிக்கும் சிலம்பாட்டம், காரைநகர் சக்தி – யது குழுவினரின் பொம்மலாட்டம், மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய உறவுகளின் கலை நிகழ்வுகள், மயிலிட்டி கே.ரி. விஷ்ணுவின் ஆதுர்சி புல்லாங்குழல் இன்னிசை மழை, சிறுப்பிட்டி ஞானகலைமாமணி சத்தியதாஸ் வில்லிசைக்குழுவினர் வழங்கும் “வள்ளி தெய்வானை திருமணம்” வரலாறு வில்லிசை சங்கமம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற உள்ளன.

தெப்பத்திருவிழா நிகழ்வுகளில் கலந்து கொள்பவர்களுக்கான விசேட பஸ் இன்று மாலை 3.30 மணியளவில் தும்பளை பருத்தித்துறையிலிருந்து கடற்கரைவீதியினூடாக புறப்பட்டு சுப்பர் மடம், இன்பர்சிட்டி, திக்கம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமனாறு பலாலி ஊடாக மயிலிட்டியை வந்தடையும். பின்னர் இரவு பூஜை நிகழ்வுகள் முடிந்த பின்பு புறப்பட்டு பருத்தித்துறையை வந்தடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூடுகின்ற இடங்களிலே இடம்பெறுகின்ற அனர்த்தங்கள் பற்றி அவ்வப்போது இந்தியாவிலிருந்து செய்திகள் கேள்விப்படுகின்றோம். தெய்வாதீனமாக அத்தகைய அனர்த்தங்கள் எதுவும் இலங்கையில் இடம் பெறவில்லை.

ஆயினும், வருடாந்தம் நல்லூரானின் திருவிழாவில் திரளும் பக்தர் கூட்டங்களைப் பார்க்கும் போது – அதுவும் கடந்த வருடம் சில திருவிழாக்களின் போது இடம் பெற்ற சம்பவங்களை பார்க்கும் போது – போதிய முன்னெச்சரிக்கை அவசியமென்று தோன்றுகின்றது. நடந்த பின்னர் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதில் அர்த்தமில்லை.

பல லட்சம் பேர் கூடும் இடத்தில் அவர்கள் வரவும், கலையவும், வெளியேறிச் செல்லவும், அனர்த்தம் நேர்ந்தால் அதனை கையாளவும் உரிய முறைமைகள், பாதைகள், ஒழுங்குகள், ஏற்பாடுகள் சரியாக இருக்கின்றனவா என்பதை நிபுணத்துவ ரீதியில் முற்கூட்டியே ஆராய்ந்து உறுதி செய்ய வேண்டியது சம்பந்தப்பட்டோரின் பொறுப்பு.

அத்தகைய சம்பந்தப்பட்டோர் யார் என்று கேள்வியும் உண்டு. நேர அட்சரம் பிசகாமல் ஒழுங்கு முறைப்படி உலகமே வியக்கும் விதத்தில் கோயில் ஏற்பாடுகளை முன்னெடுக்கும் கோயிலின் நிர்வாகமா? அல்லது திருவிழாவை வைத்து விடயங்களை ஒழுங்குப்படுத்தி வருமானத்தை திரட்டிக் கொள்ளும் யாழ் மாநகர சபையா? அதிலும் மாநகர சபையின் மக்கள் பிரதிநிதிகளா? அல்லது அலுவலர்களா? அல்லது சட்டம், ஒழுங்குக்குப் பொறுப்பான பொலிஸ் துறையா? அல்லது அனர்த்த முகாமைத்துவ அமைச்சா? அல்லது தங்கள் வீதிகளை கண்மூடித்தனமாக மூடி மறைத்து விடயங்களைக் கொண்டு நடத்த இடம் அளித்துப் பார்த்திருக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபையா?

பொறுப்பு யாராகவும் இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் திருவிழா தொடங்கும் போது இத்தகைய நெருக்கடிகள் நேர்ந்தால் அதற்குப் பதில் கூற வேண்டியவர்கள் யார் என்பதை முதலில் பகிரங்கப்படுத்தி விடுவது நல்லது.

கடந்த தடவை ஏற்பட்ட கூட்ட நெரிசலில் ஒரு கர்ப்பிணிப் பெண் உட்பட பலர் சிக்குண்டு மயங்கியமையும், அவர்களை மீட்டு அம்புலன்ஸில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல முடியாத நெருக்கடி நிலைமை காணப்பட்டமையும் மறக்க அல்லது மறுக்கக் கூடியவை அல்ல.

இப்போதும் நேரத்துடன் எச்சரிக்கிறோம். அனர்த்தம் நேர்ந்த பின்னர் ஆளையாள் குற்றச்சாட்டு விரலை நீட்டாமல், இப்போதே இந்த ஒழுங்குகளை உறுதிப்படுத்தி நெறிப்படுத்துபவர் யார் என்பதை குறைந்தபட்சம் மாநகர முதல்வராவது நேரத்துடன் தெளிவுபடுத்தி விட்டால் நல்லது.

நல்லூரான் திருவிழா தெய்வ அனுக்கிரகத்துடன் இம்முறையும் இனிதே நடந்தேற கந்தன் அருள் வேண்டுவோம்...!

* * *

ஒருபுறம் நல்லூரான் திருவிழா போல, மறுபுறம் வழமை போன்று அரசியல் திருவிழா ஒன்று களை கட்டத் தொடங்குகின்றது. அது ஜெனிவாவில் கூடவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அமர்வு தொடர்பான திருவிழா.

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் நிறைவேற்றிய முன்னைய தீர்மானம் இந்த செப்டெம்பர் அமர்வோடு காலாவதியாவதால் புதியதீர்மானம்ஒன்றைநிறைவேற்றுவதற்கான பிரேரணை நகர்வு இப்போதே ஆரம்பமாகிவிட்டது. இணை அனுசரணை நாடுகள் அதில் தீவிரம் காட்டுகின்றன.

அதேசமயம் இந்த விவகாரத்தை வைத்து தொடர்ந்து அரசியல் பந்தாடும் தமது விளையாட்டை தமிழ் கட்சிகளும் தொடங்கி விட்டன.

ஆக வடக்கில் மட்டும் ஒரே ஒரு எம்.பியை கொண்டிருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சி, தான் ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு எழுதும் கடிதத்தில், வடக்கு – கிழக்கு எங்கும் தொடர்ந்து அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருக்கும் தமிழர்களின் தேசியக் கட்சியான இலங்கைத் தமிழரசு கையெழுத்திட வேண்டும் என்ற கேலிக்கூத்து திருவிழாவை இப்போதே தொடங்கி விட்டது. அவரது கட்சியின் அலப்பறை குறித்து தமிழ் மக்களும் ஏனைய கட்சிகளும் தீர்மானித்துக் கொள்ளட்டும்.

இந்தத் தடவை இன்னொரு பிரேரணை இலங்கை தொடர்பாகக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும் என்பது பெரும்பாலும் உறுதியாகத் தெரிகிறது.

கடந்த தடவை போல இலங்கையில் யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான சான்றுகள், ஆதாரங்கள், சாட்சியங்களைப் பதிந்து சேமிக்கும் நடவடிக்கை தொடரும் என்ற விடயம் அந்தப் புதிய பிரேரணையிலும் இடம் பெற்றிருக்கும் என்று தெரிகின்றது.

அதேபோல பொறுப்புக் கூறல் மற்றும் மாகாண சபை தேர்தல்களை நடத்துவது தொடர்பாக புதிய இலங்கை அரசு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி வலியுறுத்துதல் போன்றவை இந்தத் தடவை புதிய பிரேரணையிலும் இடம்பெற்றிருக்கும் என்று ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயினும், இம்முறை புதிதாக செம்மணிப் புதைகுழி விவகாரம் வந்திருக்கின்றது. அது தொடர்பில் இணை அனுசரணை நாடுகள் தங்களது உத்தேச பிரேரணை வடிவத்தில் என்ன நிலைப்பாட்டைச் சேர்த்துக் கொள்வார்கள் என்பது இன்னும் தெரியவில்லை.

செம்மணி புதைகுழி அகழ்வு நடவடிக்கையில் சர்வதேச நிபுணத்துவத்தை இணைத்துக் கொள்ளுதல், அந்த என்புக் கூடுகளை அடையாளம் காணும் விடயத்திற்கு மரபணு ரீதியான விடயங்களை கையாள்வதில் தேர்ந்த சர்வதேச நிபுணர்களின் உதவியைப் பெறுவது போன்ற அம்சங்களை இந்த முறை இலங்கை தொடர்பான பிரேரணையில் இணை அனுசரணை நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்கு இணை அனுசரணை நாடுகளையும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகளையும் தமிழர் தரப்பு தவறாமல் வற்புறுத்திக் கோர வேண்டும்.

தனித்தனியாக கடிதங்கள் அனுப்பினாலும், சேர்ந்து ஒப்பமிட்டுக் கோரிக்கைகளை முன்வைத்தாலும், இந்த விடயத்தையும் அரசியல் கட்சிகள் முக்கியத்துவம் கொடுத்து கவனத்தில் எடுப்பது அவசியமாகும்.

## செம்மணி அகழ்வுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வுப் பணிகளின் போது யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் அகழ்வுப் பணிகளில் முன்னிலையான பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

“செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இரண்டு சிறிய பகுதிகளில் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற போதும் நூற்றுக்கும் மேற்பட்ட என்புத் தொகுதிகள் மீட்கப்படுகின்ற காரணத்தால் இன்னும் அதிக எண்ணிக்கையில் என்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்படலாம் என்ற சந்தேகம் உள்ளது.

மேலும் என்புத் தொகுதிகள் ஆழமாகப் புதைக்கப்படவில்லை. நில மட்டத்திலிருந்து ஐம்பது சென்ரிமீற்றர் ஆழத்தில் கூட உடல்கள் புதைக்கப்பட்டிருக்கின்றமையைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இங்கு உடல்கள் புதைக்கப்பட்டிருக்கக்கூடிய விதமானது பல்வேறு சந்தேகங்களை எழுப்புகின்றது. வயது குறைந்தவர்களுடைய என்புத் தொகுதிகளும் கண்டெடுக்கப்படுகின்றன.

மேலும் செம்மணி மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட பகுதி மயானமாக இருப்பதனால் ஒரு சில முறையாக புதைக்கப்பட்ட என்புத் தொகுதிகளும் கண்டறியப்படலாம். ஆனால், அவற்றை இலகுவாகக் கண்டறிந்து கொள்ள முடியும்.

கொக்குத்தொடுவாய், மன்னார், மாத்தளை போன்ற இடங்களிலும், 1994களுக்குப் பின்னர் தெற்கிலே சில இடங்களில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழி அகழ்வுடன் சம்பந்தப்பட்ட அனுபவமுடையவர்கள் இருந்தாலும் கூட மனிதப் புதைகுழியில் இருந்து அகழப்படும் என்புத் தொகுதிகள் பற்றிய பரிசோதனையைச் செய்வதற்கான நிபுணத்துவம் இலங்கையில் இல்லை. உலகில் ஒரு சில பல்கலைக்கழகங்களில் மாத்திரமே அந்தத் தொழில்நுட்பம் உள்ளது.

அகழ்ந்தெடுக்கப்படுபவை யாருடைய எச்சங்கள் என்பது அடையாளம் காணப்படுவது மிக முக்கியமானது.

அகழப்படும் என்புத் தொகுதிகளை ஆய்வுக்காக வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்புவதற்கு முன்னர் சான்றுப்பொருள்களை எப்படிப் பாதுகாத்துக் கொள்வது போன்ற நிபுணத்துவங்கள் கூட சர்வதேச நிபுணர்கள் இடத்தில் இருந்தே பெற வேண்டியனவாக உள்ளன.

ஆகவே, செம்மணி அகழ்வு நடவடிக்கைகளின் போது நிபுணத்துவமுடைய சர்வதேச மேற்பார்வையாளர்களை வரவழைக்க வேண்டும் என இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். இந்த விடயங்களைச் சரியான முறையில் ஆராய்ந்தாலே நாட்டில் நடைபெற்ற பலவிதமான சர்வதேச குற்றச் செயல்களுக்கான சாட்சியங்கள் வெளிவரும்.

நல்லிணக்கத்தை நோக்கி நகர்கின்றோம் எனச் சொல்லுகின்ற அரசு இந்த உண்மைகள் வெளிவருவதற்கு ஏற்ற சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச குற்றச் செயல்களுக்கான சாட்சியங்கள் வெளி வருகின்றன. அரசு நல்லிணக்கத்தை நோக்கி நகர்கின்றோம் எனச் சொல்கின்றபோது, எந்த நல்லிணக்கமும் உணமையின் அடிப்படையிலேயே செய்யப்படலாம். உண்மையை மூடி மறைத்து விட்டு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. எனவே, செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான உண்மையும் வெளிவருவதற்குச் சகல நடவடிக்கைகளையும் அரசு செய்து கொடுக்க வேண்டும். அதற்கான அனுமதிகளைக் கொடுக்க வேண்டும். இதனைப் பரிசோதிக்கச் சர்வதேச நிபுணர்களை வரவழைத்து பரிசோதனைக்காகச் சர்வதேச நிபுணர்களின் கைகளில் ஒப்படைக்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை நாமும் வேறு விதங்களில் 07

# முன்னாள் சிரேஷ்ட டி.ஐ.ஜி. பிரியந்த ஜெயக்கொடி கைது

முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜெயக்கொடி குற்றப் புலனாய்வுத் துறையால் (சி.ஐ.டி) கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவரான கோரலகமகே மண்டினு பத்மசிறி, அல்லது 'கெஹெல்பத்தர பத்மே' என்பவரிடமிருந்து தனக்கு கொலை மிரட்டல் வந்ததாகக் கூறி பொய்யான முறைப்பாடு அளித்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜெயக்கொடி தற்போது உடல்நலக் குறைவு காரணமாக குற்றப் புலனாய்வுத் துறையின் காவலில் ராகம மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



# திலினி பிரியமாலி பிணையில் விடுதலை



ஹோமாகம மாவட்ட நீதிமன்றத்தின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்ட தொழிலதிபர் திலினி பிரியமாலிக்கு, பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 16 ஆம் திகதி நீதிமன்றத்தின் அறிவித்தல் விநியோகிக்கும் பணியைத் தடுத்தமை மற்றும் அதிகாரிகளின் பணிகளுக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் சந்தேகநபர் நேற்று பொலிஸார் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், 200,000 ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல ஹோமாகம நீதவான் ரஜிந்திரா ஜயசூர்ய அனுமதியளித்துள்ளார்.

# மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு பவ்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது




நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மாகாண சபைத் தேர்தல்களை மேலும் தாமதமின்றி நடத்துமாறு பவ்ரல் அமைப்பு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

அறிக்கையொன்றை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ள, அந்த அமைப்பு இறுதியாக 2014ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் திகதி ஊவா மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றதுடன், அதன் பின்னர் 11 வருடங்களாக எந்தவொரு மாகாணசபை தேர்தலும் நடைபெறவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தில் மாகாண சபை மற்றும் தேர்தல் திருத்தச் சட்டம் ஊடாக மாகாண சபை தேர்தல் முறைமை திருத்தப்பட்டமையும், அது தொடர்பான சட்ட ஏற்பாடு மற்றும் எல்லை நிர்ணய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையும், மாகாண சபைத் தேர்தலை தாமதப்படுத்தியுள்ளது.

தற்போதுள்ள சட்டத்தின்படி, ஒவ்வொரு ஆறு வருடங்களுக்கும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும், எனினும், அடுத்தடுத்த அரசாங்கங்கள் தேவையான சட்ட மற்றும் நிர்வாக செயல்முறைகளை முன்னெடுக்க தவறியுள்ளன.

தற்போதைய அரசாங்கம் இந்த தேர்தல் தாமதத்துக்கு பொறுப்பல்ல என்ற போதிலும் தேர்தலை நடத்துவதிலுள்ள தடையை நீக்கி, தேர்தலை நடத்த வழிவகுப்பது அதன் பொறுப்பாகும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான சட்டத்திருத்தத்துக்காக தற்போது, இரண்டு தனிநபர் பிரேரணைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனவே, விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் அது குறித்து ஆராய்ந்து, அவசியமான திருத்தங்களை மேற்கொண்டு, அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாகாண சபை முறைமை தொடர்பில் அல்லது மாகாண சபை தேர்தல் முறைமை தொடர்பில் ஏதேனும் சிக்கல் இருப்பின், அது குறித்து விரைவில் கலந்துரையாடி தீர்க்க முடியும்.

உடனடியாக தேர்தலை நடத்துவதற்காக பழைய முறைமையில் தேர்தலை நடத்த, குறுங்கால சட்டதிருத்தமொன்று பொருத்தமானது என பெப்ரல் அமைப்பு பரிந்துரைக்கிறது.

அத்துடன், பழைய முறைமையின் கீழ் தேர்தலை நடத்த குறுங்கால திருத்தமொன்று கொண்டுவரப்படுமாயின், பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக, வேட்புமனுவில் 25% ஒதுக்கீட்டையும் அதில் உள்ளடக்க வேண்டும் எனவும் பவ்ரல் அமைப்பு கோரியுள்ளது.

## செம்மணி அகழ்வுக்கு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

செய்து கொண்டிருக்கின்றோம்.

சர்வதேச நிபுணர்களை வரவழைத்து அவர்களுடைய கையிலே செம்மணி விடயத்தை ஒப்படைக்க வேண்டும். என்புத் தொகுதிகள் பற்றிய பரிசோதனையை மேற்கொண்டு அறிவிக்கும் பொறுப்பு முழுவதும் சுயாதீனமாகச் செயற்படுகின்ற சர்வதேச நிபுணர்களிடத்தே கையளிக்கப்பட வேண்டும்.

சர்வதேச நிபுணத்துவத்தைப் பெறுவதற்கான நகர்வுகளை வேறு வழிகளிலும் மேற்கொண்டு வருகின்றோம். வரும் நாள்களில் நீதிமன்றம் ஊடாக ஏதாவது கட்டளைகள் பெறப்பட வேண்டிய தேவை ஏற்படின் அந்தக் கருமங்களிலும் ஈடுபடுவோம்." – என்றார்.



# ‘ரிக் ரொக்’ காதலனின் சொகுசு வாழ்வுக்கு வீட்டிலேயே நகைகளைத் திருடிய காதலி!

## காதலன், காதலி உள்ளிட்ட ஏழு பேர் கைது!!

யாழ்ப்பாணத்தை சேர்ந்த ‘ரிக் ரொக்’ பிரபலங்களில் ஒருவரான தனது காதலனுக்கு மோட்டார் சைக்கிள் வாங்க வீட்டில் நகைகளை களவாடிய காதலி யுவதி உள்ளிட்ட ஏழு பேரை சாவகச்சேரி பொலிஸார் நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ளதாவது,

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவர் ‘ரிக் ரொக்’ சமூக வலைத்தளங்களில் தனது காணொளிகளை பதிவேற்றி பிரபலமானவராக தன்னை காட்டிக் கொண்டு வந்துள்ளார்.

அந்த இளைஞனுடன் ‘ரிக் ரொக்’ மூலம் அறிமுகமான சாவகச்சேரி பகுதியை சேர்ந்த யுவதி , அவரை காதலித்து வந்துள்ளார்.

அந்த நிலையில் தனது காதலனுக்கு, அதிநவீன மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காகவும் காதலன் சொகுசு வாழ்க்கை வாழ்வதற்காவும் தனது வீட்டில் இருந்து சுமார் 19 பவுண் நகையைக் களவெடுத்து அதனை காதலனிடம் கொடுத்துள்ளார்.

வீட்டில் இருந்த நகைகள் காணாமல் போனமை தொடர்பில், யுவதியின் பெற்றோர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததிருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , யுவதி மீது சந்தேகம் கொண்டு அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்த போது, வீட்டில் இருந்த நகைகளைத் தான் களவெடுத்துக் காதலனுக்கு வழங்கியதை ஒப்புக் கொண்டுள்ளார்.

யுவதியின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் அவரது காதலனை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதன் அடிப்படையில் வீட்டில் நகைகளை களவெடுத்த யுவதி, அவரது காதலன், யுவதி வீட்டில் நகைகளை களவெடுப்பதற்கு உடந்தையாக செயற்பட்ட யுவதியின் நண்பி, நகைகளை விற்க உதவியவர்கள், நகைகளை வாங்கியவர்கள் என ஏழு பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஏழு நபர்களையும் பொலிஸ்நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# முஸ்லிம் திருமண – மணவிலக்கு சட்டத்தில் திருத்தம் வேண்டும் என்கின்றார் அலி சப்ரி



முஸ்லிம் திருமண மற்றும் மணவிலக்குச் சட்டத்தில் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை தான் நீதி அமைச்சராக இருந்த போதே வலியுறுத்தியதாக முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தான் நீதி அமைச்சராக வெறும் 19 மாதங்கள் மாத்திரமே பணியாற்றியதால், இதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் அந்தக் குறுகிய காலத்திலும், தாங்கள் 100க்கும் மேற்பட்ட பழமையான சட்டங்களை மீண்டும் ஆய்வு செய்ததாகவும், அவற்றில் சுமார் 40 சட்டங்கள் ஏற்கனவே நடைமுறைக்கு வந்துவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், சட்டம் செயல்படுத்துவது எளிதான அல்லது விரைவான செயல்முறை அல்ல என்றும் இது ஒரு சிந்தனையுடன் கூடிய மற்றும் சிக்கலான பயணம் என்றும் அலி சாப்ரி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், சிலர் இஸ்லாமியர்களுக்கான தனிப்பட்ட சட்டத்தை முற்றிலுமாக நீக்க விரும்பியதாகவும், எனினும் அவர்களின் காரணங்கள் நீதி அல்லது நியாயத்தின் அடிப்படையில் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

எனினும் தம்மை பொறுத்தவரை, அந்த சட்டத்தை நீக்குவதை விட, சீர்திருத்தமே தேவைப்பட்டதாகவும் முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நடக்குமா மாகாணத் தேர்தல்?

எதிர்க்கட்சிகள் தரப்பில் இருக்கும் போது அதிகாரத்துக்கு வருவதற்காகவும் ஆட்சியைப் பிடிப்பதற்காகவும் நப்பாசையோடு தேர்தல்களை நடத்துமாறு வலியுறுத்துவதும், பின்னர் அதிகாரத்துக்கு வந்து ஆட்சியைக் கைப்பற்றியதும் தமக்கு வசதி, வாய்ப்பு, சாதகம் இருந்தால் மட்டும் தேர்தலை நடத்துவதும், இல்லாவிட்டால் சாக்குப் போக்குக் காரணம் கூறி தள்ளிப் போடுவதும் அரசியல் கட்சிகளின் பரவணிப் பழக்கமாகி விட்டது.

இதுவரை காலமும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த தென்னிலங்கைக் கட்சிகள் மாத்திரம் அல்ல, இப்போது புதிதாக அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் தேசிய மக்கள் சக்தியும் இதற்கு விதிவிலக்கு அல்ல என்பது இப்போது நிரூபணமாகி உள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களை இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்துவோம் என்று தமிழ் எம்.பிக்களுக்கு தமது வாயினால் தாமே நேரடியாக உறுதிமொழி கொடுத்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, இப்போது தாமே பின்வாங்கத் தொடங்கி விட்டார். அடுத்த ஆண்டில் அந்தத் தேர்தல் நடக்கும் என்று அவரது தரப்பில் இப்போது கூறப்படுகிறது.

ஆனால் நீண்ட காலமாக தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களுக்கான மக்கள் நடவடிக்கைக் குழு ('பவ்ரல்') கூறுகின்றது.

இது தொடர்பில் ஓர் அறிக்கையை வெளியிட்ட 'பவ்ரல்' அமைப்பு, தாமதமின்றி இத்தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருக்கின்றது.

சட்டத்தின்படி, மாகாண சபைத் தேர்தல்கள் ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டும். ஆனால் பல்வேறு காரணங்களால், இது செயல்படுத்தப்படவில்லை. பொதுமக்களிடமிருந்து பலமுறை கோரிக்கைகள் இருந்தபோதிலும், தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

எனவே, தேர்தலை நடத்துவதில் ஏற்படும் தாமதம் பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளிடையே கவலைகளை எழுப்பியுள்ளது என்று 'பவ்ரல்' சுட்டிக்காட்டுகிறது.

மேலும் தேர்தல்களை ஒத்திவைப்பது ஜனநாயகக் கொள்கைகளையும் சட்டத்தின் ஆட்சியையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்றும், தேர்தல்களை நடத்தத் தவறுவது அரசமைப்பு விதிகள் மற்றும் ஜனநாயக விதிமுறைகளை மீறுவதாகும் என்றும் சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் என 'பவ்ரல்' தெரிவித்துள்ளது.

மாகாண சபைச் சட்டம் அல்லது மாகாண சபைத் தேர்தல் சட்டம் போன்றவை மேலும் திருத்தப்பட்டால், அது செயல்முறையை மேலும் தாமதப்படுத்தக்கூடும் என்று கூறிய 'பவ்ரல்', ஆகவே தேர்தலை மேலும் தாமதமின்றி நடத்துவதற்கான சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முதன்மைக் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

இதேசமயம், சிவில் சமூகக் குழுக்களைச் சேர்ந்தோரும் ஆர்வலர்களும் மாகாணசபைத் தேர்தலை விரைந்து நடத்தக் கோரும் தங்கள் பிரசாரங்களை தீவிரப்படுத்தியுள்ளனர். அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். பொது பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கும் ஜனநாயக ஆட்சியை நிலைநிறுத்துவதற்கும் தேர்தல்களை நடத்துவது அவசியம் என்பதை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆனால், இவை எல்லாம் அதிகாரத் தரப்பின் காதுகளில் ஏறுமா என்பதுதான் கேள்வி.

# பூப் புனித நீராட்டு விழா நிகழ்வில் நடனமாடிய இளைஞர் உயிரிழப்பு

பூப் புனித நீராட்டு விழா ஒன்றில் நடனமாடிய இளைஞர் ஒருவர் பிடரி அடிபட விழுந்ததன் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பல்லகட்டி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த அன்ன ராசா அலக்சன் (வயது 19) என்பவராவர்.

மேற்படி இளைஞர் மல்லாகம் நரியிட்டால் பகுதியில் உள்ள உறவினர் வீடு ஒன்றில் இடம் பெற்ற பூப் புனித நீராட்டு விழாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கலந்து கொண்டுள்ளார். அப்போது நள்ளிரவு 11. 40 மணியளவில் அவர் உணவருந்திக் கொண்டிருந்த போது ஒரு பாடலுக்கு அருந்திய உணவை வைத்துவிட்டு நடனமாடியுள்ளார். அவ்வாறு ஆடிய போது தலைப்பகுதியின் பின்பக்கம் நிலத்தில் அடிபட விழுந்துள்ளார்.

உடனடியாக அவரை தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை



திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை தெல்லிப்பளைப் பொலிஸார் நெறிப்படுத்தினர். சடலம் யாழ்.போதனா வைத்தியசலை கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொண்டதில் மரணத்திற்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தித்துறை மீனவர்கள்







யாழ். வடமராட்சி – பருத்தித்துறை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையால் யாழ். மாவட்ட மீனவர்களின் வலைகள் அழிக்கப்பட்டு வருவதாக கடற்றொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த சில தினங்களாக எல்லை தாண்டி இந்திய மீனவர்களின் இழுவைமடி படகுகளின் மீன்பிடி அதிகரித்துள்ளது.

இதனால், நாளாந்தம் எமது வலைகள் அறுத்தழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இழுவைப்படகுகளால் அறுத்தழிக்கப்படுவதுடன் வலைகள் காணாமல்ப் போவதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் இரவு இந்திய மீனவர்களது இழுவைப்படகுளின் எல்லை தாண்டிய மீன்பிடியால் பருத்தித்துறை பகுதி கடற்றொழிலாளர்களது வலைகள் அழிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், உள்ளூரில் சட்டவிரோத மீன்பிடியான சுருக்குவலைத் தொழில் நடவடிக்கையால் எமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி வருகிறது.

இதனைக் கட்டுப்படுத்த மீன்பிடி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய மீனவர்களின் அத்துமீறலையும் தடுத்து நிறுத்த வேண்டும் என கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





# மாலைதீவு - இலங்கை ஜனாதிபதிகள் பேச்சு

மாலைதீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும், மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சுவிற்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நேற்று பிற்பகல் மாலைதீவு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றன.

மாலைதீவு ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு, மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு மகத்தான வரவேற்பளித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விருந்தினர் புத்தகத்தில் நினைவுக் குறிப்பு இட்ட பிறகு, இரு நாடுகளின் தலைவர்களும் உத்தியோகபூர்வ புகைப்படம் பிடிக்கும் நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

அதன் பின்னர், ஜனாதிபதிக்கும் மாலைதீவு ஜனாதிபதிக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

கலந்துரையாடலைத் தொடர்ந்து, இரு தரப்பினருக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அதன்படி, மாலைதீவு வெளியுறவு சேவை நிறுவனம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் பரஸ்பர சட்ட உதவி வழங்கல் தொர்பான ஒப்பந்தம் என்பன பரிமாறப்பட்டன.

இந்த ஒப்பந்தங்கள் மாலைதீவு மற்றும் இலங்கை இடையே பல்வேறு துறைகளிலான உறவுகளையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்த உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குற்றங்களைக் கையாள்வதில் பரஸ்பர சட்ட உதவி வழங்குவதை முதலாவது ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இரண்டாவது ஒப்பந்தம் இரு நிறுவனங்களுக்கும் இடையில் இராஜதந்திர பயிற்சி அளிப்பது மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையே தகவல் மற்றும் ஆவணங்களைப் பரிமாறிக்கொள்வது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தங்களை மாலைதீவு சார்பில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் கலாநிதி அப்துல்லா கலீல் மற்றும் இலங்கை சார்பில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் பரிமாறிக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு ஆகியோர் மாலைதீவுக்கான அரச விஜயம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டனர்.









# நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு!

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 04 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வேதாந்த மடம், ஸ்ரீசிவகுருநாத பீட 8 ஆவது குருபீடாதிபதி வணக்கத்துக்குரிய ஸ்ரீவேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலையில் தெல்லிப்பளை, ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வாழ்த்துரை வழங்க, நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் தலைவர்–வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ சா. சோமதேவக்குருக்கள் தலைமை வகிக்கவுள்ளார்.

நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி. யசோதா உதயகுமார் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, யாழ். தேசிய கல்வியியல்கல்லூரி, சிரேஷ்ட விரிவுரையாளர் மகாலிங்கம் நிரேஷ்குமார் சிறப்பு பிரதியாகவும் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர், ஆறுமுகராசா பாலச்சந்திரன, நல்லூர் சங்கிலியன் மன்றத்தைச் சேர்ந்த இராமலிங்கம் சந்திரகுமார், நல்லூர், சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சு.சத்தியேந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

கலை நிகழ்வுகளை நல்லூர், சைவ வித்தியா விருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை மாணவர்களும் வரவேற்புரையை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள நல்லூர் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ர.நகுலாவும் நிகழ்த்துவர்.

சிறப்பு நிகழ்வாக “லலிதகலாவேதி” திருநாவுக்கரசு லவணியன் வழங்கும் இசைக்கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து நன்றியுரையை நல்லூர், சைவ வித்தியா விருத்திச்சங்க அறநெறிப் பாடசாலை ஆசிரியர் செல்வி. சஞ்சிகா சந்திரகாந்தன் வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வைக் கண்டுகளிக்க இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.






# நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று கொடியேற்றம்...!

நல்லூர் கந்தசுவாமி கோயில் என்பது இலங்கையில் மிகவும் புகழ் பெற்ற இந்துக் கோயில்களுள் முக்கியமானது. இது இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில், யாழ்ப்பாண நகரத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள நல்லூர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

நல்லூர் 12 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இருந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக இருந்தது. இந்தக் கோயிலின் தோற்றம் பற்றிச் சரியான தெளிவு இல்லை எனினும், யாழ்ப்பாண அரசு காலத்தில் மிகவும் முக்கியமான ஒரு கோயிலாக இருந்ததாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சனொருவனான புவனேகவாகு என்பவனால் இந்தக் கோயில் கட்டுவிக்கப்பட்டதென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இதற்கு ஆதாரமான பின்வரும் தனிப் பாடல், 16 அல்லது 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் கைலாய மாலை என்னும் நூலின் இறுதியில் காணப்படுகின்றது.

“இலக்கிய சகாத்தமெண்ணூற் றெழுபதாமாண்டதெல்லை
யலர்பொலி மாலை மார்பனாம் புவனேகபாகு
நலமிகுந்திடு யாழ்ப்பாண நகரிகட்டுவித்து நல்லைக்
குலவிய கந்தவேட்குக் கோயிலும் புரிவித்தானே”

ஆனால் இது 15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் ஆண்ட கோட்டை அரசின் பிரதிநிதியான, பிற்காலத்தில் சிறீ சங்கபோதி எனும் பட்டத்தைக் கொண்ட புவனேகபாகு எனப் பெயர் கொண்டு கோட்டை அரசரான, செண்பகப் பெருமாள் என்பவரால் கட்டப்பட்டதாகும். இதற்கு ஆதாரமாக நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்றும் கூறப்பட்டுவரும் கட்டியத்தை இவர்கள் காட்டுகிறார்கள். சமஸ்கிருதத்தில் உள்ள இக்கட்டியத்தின் பகுதி பின்வருமாறு உள்ளது.

“ஶ்ரீமான் மஹாராஜாதி ராஜாய அகண்ட பூமண்டலப்ரதியதி கந்தர விஸ்வாந்த கீர்த்தி சிறீ கஜவல்லி மஹாவல்லி சமேத சுப்ரமண்ய பாதாரவிந்த ஜனா–திரூட சோடச மஹாதான சிவகோத்திரோற்பவ இரகு நாதமாப்பாணர் சமுக”

திருவருள் பொருந்திய தெய்வயானையுடனும், வள்ளியம்மனுடனும் சேர்ந்திருக்கின்ற சுப்பிரமணியரின் திருவடிகளை வணங்குபவனும், மன்னர்களுக்கு மன்னனும், மிகுந்த செல்வங்களுடையவனும், இந்தப் பரந்த பூமண்டலத்தில் எல்லாத் திசைகளிலும் புகழப்படுபவனும், மக்கள் தலைவனும், பதினாறு பெருந்தானங்களைச் செய்பவனும், சூரிய குலத்தில் உதித்தவனுமாகிய ஸ்ரீ சங்கபோதி புவனேகவாகு என்பது இதன் பொருள்.

முன்னரே சிறியதாக இருந்த கோயிலைத் தனது ஆட்சிக்காலத்தில் புவனேகவாகு பெருப்பித்துக் கட்டியிருக்கக் கூடும் என்பதே பொருத்தம் என்பது வேறுசிலர் கருத்து.

உண்மையில் நல்லூர் இப்போது உள்ள அமைப்பானது முன்றாவது கோயில் கட்டுமானம் ஆகும். இந்த 3 ஆவது கோயிலின் அமைப்பில் அதுவரை இருந்த பழைய ஆலயத்தின் எந்தக் கட்டுமானங்களும் சமந்தப்படாத புதிய கட்டுமானம் தான் இப்போதுள்ள நல்லூர்கந்தன் ஆலயம் அகும்.

யாழ்ப்பாண அரசின் இறுதிக் காலத்தில் நல்லூரில் இருந்த மிகப்பெரிய கோவில் இதுவே என்பது போத்துக்கீசருடைய குறிப்புக்களில் இருந்து தெரிய வருகிறது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போத்துக்கீசத் தளபதியான பிலிப்பே டி ஒலிவேரா, 1620 இல் அரசின் தலை நகரத்தை யாழ்ப்பாணத்துக்கு மாற்றியபோது நல்லூர்க் கோயிலை இடித்துத் தரை மட்டமாக்கும்படி உத்தரவிட்டான். இதிலிருந்து பெறப்பட்ட கற்கள் யாழ்ப்பாணத்தில் புதிய கோட்டை கட்டுவதில் பயன்பட்டன எனத்தெரிகின்றது. இது இருந்த இடத்தில் போத்துக்கீசர் சிறிய கத்தோலிக்க தேவாலயமொன்றை அமைத்ததாகத் தெரிகிறது. பின்னர் ஒல்லாந்தர் இதனைத் தாங்கள் சார்ந்த புரட்டஸ்தாந்த கிறிஸ்தவ தேவாலயமாக மாற்றினார்கள். இன்றும் இவ்விடத்தில் பிற்காலத்தில் பெரிதாகத் திருத்தியமைக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயமே காணப்படுகின்றது.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் (1658-1798) இறுதி ஆண்டுகளில் இந்துக் கோயில்கள் அமைப்பது தொடர்பாக ஆட்சியாளர்களின் இறுக்கம் ஓரளவு தளர்ந்தபோது, நல்லூர் கந்தசுவாமி கோயில் மீள அமைக்கப்பட்டது. முன்னைய இடத்தில் கிறிஸ்தவ தேவாலயம் இருந்தபடியால் இன்னொரு இடத்தில் கோயிலை அமைத்தார்கள்.

மடாலயம் போல் காட்சியளித்துக் கொண்டிருந்த இவ்வாலயத்தை, ஆகமம் சார்ந்த கிரியை முறைக்கும், சிற்ப சாத்திர விதிக்கமைந்த கட்டட முறைக்கும் மாற்றியமைத்து, இன்றைய நிலைக்குக் கொண்டுவரவித்திட்டவர் ஆறுமுக நாவலர் ஆவார். அவரைத் தொடர்ந்து, அவரது மாணவர்கள் இவ்வாலய வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டினார்கள்.

தொடர்ச்சி▼



# நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று கொடியேற்றம்...!

தொடர்ச்சி▲

இவ்வாலயத்தின் கர்ப்பக்கிருகத்தில் சிலாவிக்கிருகத்துக்குப் பதிலாக வேல் அமைக்கப்பட்டுள்ளது. இதனைச் சுற்றி பிள்ளையார் முதலான பரிவாரத் தெய்வங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாலயம் கிழக்கிலும், தெற்கிலும், வடக்கிலும் வாசல்களைக் கொண்டுள்ளது. இவற்றின் மேல் பெருங்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தின் தெற்குப் புறத்தில் உள்ள தீர்த்தக் கேணி நன்கு திட்டமிடப்பட்டு, படிக்கட்டுகளும் மண்டபங்களும் கொண்டதாய் அமைக்கப்பட்டுள்ளது. முருகனின் மூர்த்தங்களில் ஒன்றான தண்டாயுதபாணிக்கு அங்கு சிறு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் நான்கு பக்கங்களிலும் மடாலயங்கள் உள்ளன.

இவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் காலந் தவறாது நடைபெறுகின்றன.

தினமும் அதிகாலை 4.30 மணிக்கு திருப்பள்ளியெழுச்சி பூஜை இடம்பெறுகின்றமையும், மாலையில் பள்ளியறைப் பூஜை இடம்பெறுகின்றமையும் இந்த ஆலயத்தின் சிறப்புகளில் ஒன்றாகும். திருவிழா காலங்களில் மட்டுமல்லாமல் தினமும் மாலையில் முருகப் பெருமானை ஊஞ்சற் பாட்டுப்பாடி, அழகிய சிறு மஞ்சத்தில் ஏற்றி பள்ளியறையில் துயில் கொள்ளச் செய்வதும், மறு நாள் அதிகாலையில் திருநல்லூர்த் திருப்பள்ளியெழுச்சி பாடி, முருகனைத் துயிலெழுப்பி அதே சிறு மஞ்சத்தில் அழைத்து வந்து மூலஸ்தானத்தில் அமர்த்துவதும் சிறப்பான மரபாகும்.

இங்கு, ஆவணி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு இருபத்தைந்து நாட்களுக்கு மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. ஆடி அமாவாசையின் ஆறாம் நாள் கொடியேற்றத் திருவிழாவுடன் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகிறது.

மகோற்சவ காலங்களில் மெய்யடியார்கள் காவடி எடுத்தல், தீச்சட்டியெடுத்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல், அடியழித்தல், முதலான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர்.

இக்காலத்தில் புராண படனம் செய்தல், சமயப் பிரசங்கம் செய்தல், திருமுறைகள் ஓதுதல், ஓதுவார்களை அழைப்பித்து ஓதுவித்தல் முதலான சமய நிகழ்ச்சிகள் மக்களின் ஆன்மீக மேம்பாட்டுக்காக நடத்தப்படுகின்றன.

கொடியேற்றம் என்பது கோயிலின் வருடாந்த மகோற்சவத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இது கோயிலின் கொடிமரத்தில் புனிதமான கொடியை ஏற்றுவதன் மூலம் குறிக்கப்படுகிறது.

கொடியேற்றத்தின் போது, வேத மந்திரங்கள் ஓதப்படும், பக்தர்கள் அரோகரா என்று கோஷமிடுவார்கள். மேலும், செங்குந்த மரபினரால் வடிவமைக்கப்பட்ட கொடிச்சீலை கோயிலுக்கு எடுத்து வரப்படும்.

கொடியேற்றத்துக்குப் பெருந்திரளான பக்தர்கள் வருவார்கள், மேலும் தங்கள் நேர்த்திக் கடன்களைச் செலுத்துவார்கள்.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து, 25 நாள்களுக்கு மகோற்சவ திருவிழாக்கள் நடைபெறும். தேர்த் திருவிழா, தீர்த்த திருவிழா போன்ற நிகழ்வுகளும் இதில் அடங்கும்.

நல்லூர் கொடியேற்றம் யாழ்ப்பாணத்தின் கலாச்சார மற்றும் ஆன்மீக வாழ்வில் ஒரு முக்கிய நிகழ்வாகும், மேலும் இது பக்தர்களுக்கு ஒரு பெரிய கொண்டாட்டமாகும்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாவின் ஒரு பகுதியாக கொடியேற்றம் இடம்பெறும். இது ஆடி மாதத்தில், 25 நாள்கள் நடைபெறும் திருவிழாவின் தொடக்கத்தைக் குறிக்கிறது. கொடியேற்றத்தின் போது, ஆலயத்தின் கொடிமரத்தில் சிறப்பு பூஜைகளுடன் கொடி ஏற்றப்படும்.

கொடியேற்றம், நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாவின் அதிகாரப்பூர்வ தொடக்கத்தைக் குறிக்கிறது.

கொடியேற்றம், கந்தனின் அருளைப் பெறுவதற்கான ஒரு வழிபாட்டுச் செயலாகும்.

கொடியேற்ற நிகழ்வில், பக்தர்கள் பெருந்திரளாக கூடுவதால், இது ஒரு சமூக ஒன்றுகூடலாகவும் அமைகிறது.

கொடியேற்றத்தைக் காண்பது, பக்தர்களுக்கு ஆன்மீக எழுச்சியையும், உற்சாகத்தையும் தருகிறது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடியேற்றம், யாழ்ப்பாணத்தின் கலாச்சார மற்றும் மத முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும்.

# வேலவன் கொடியைக் காணுவோம் வாருங்கள்!

**( இன்று நல்லூர் கந்தன் கொடியேற்றம் )**



நினைக்க நெஞ்சில் நிற்பான் முருகன்
வனத்தில் குறத்தியை அணைத்தான் அவனும்
சினத்தில் மிதந்தால் செருக்கை அடக்குவான்
குணத்தில் உயர்வான் குறைகள் களைவான்

தீப்பொறி தோன்றினான் தீமையை அழிப்பான்
காத்திட நல்லூர் பதியினில் அமர்ந்தான்
ஆடியில் அவனுக்கு கொடியேற்ற உற்சவம்
அனைவரும் வாரீர் அவனருள் கிடைக்கும்

ஞானியர் தோன்றினர் நல்லருள் பெற்றனர்
ஊனெலாம் உருக்க உளமதை ஈந்தனர்
வானவர் மண்ணவர் மயக்கமே போக்கிட
வேலவன் நல்லூர் பதியினில் அமர்ந்தான்

நாடெலாம் இருப்பார் நல்லூரை நினைப்பார்
ஆடியை எண்ணி அவருளம் துடிக்கும்
வேலவன் கொடியை காணவே யாவரும்
விரைந்துமே நல்லூர் பதியினில் நிற்பார்

ஊரெலாம் திரளும் உணர்வெலாம் பெருகும்
வேலவன் சன்னதி வெளிச்சமாய் ஒளிரும்
அந்தணர் மந்திரம் செந்தமிழ் திருமுறை
அடியவர் அரோகரா ஏறிடும் கொடியும்

வேதமும் நாதமும் விண்ணை எட்டும்
தேவரைத் திரும்பிப் பார்த்திட வைக்கும்
பூதலம் நல்லூர் புனிதமாய் ஜொலிக்கும்
யாவரும் முருகன் கொடியைப் பார்ப்பார்

ஆண்டு தோறும் கொடியேற்றம் நடக்கும்
அதனைக் கண்டிட அனைவரும் வருவார்
நல்லூர் மண்ணைத் தொட்டுமே நிற்பதை
நாளும் வாழ்வின் துணையாய் கொள்கிறார்

ஈழத்தில் நல்லூர் எல்லோர்க்கும் விருப்பம்
வேலவன் சன்னதி வினைகளைப் போக்கிடும்
ஆழமாங் காதல் வேலவன் மீதினில்
ஆதாலால் அடியவர் அனைவரும் வருகிறார்

சமத்துவம் நல்லூர் பதியது சிறப்பு
சரித்திரம் ஆகியே விட்டது நல்லூர்
தரித்திரம் அகன்றிட வைத்திடும் நல்லூர்
தரிசனம் செய்தால் தெரிந்திடும் திருவருள்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.**



# மெரிஞ்சிமுனை சூருவம் தகர்ப்பு எட்டுப் பேரும் விளக்கமறியலில்!

மெரிஞ்சிமுனை நாரயம்பதி மாதா கோயிலின் சூருவத்தை மதுபோதையில் உடைத்து சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட 8 சந்தேக நபர்களையும் 14 நாள்கள் தடுப்புக் காவலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

முன்பதாக மெரிஞ்சிமுனை நாரயம் பதி மாதா கோயிலின் சுருவத்தை 20 பேர் கொண்ட குழு ஒன்று கடந்த 25 ஆம் திகதியன்று நிறை போதையில் உடைத்து சேதப்படுத்தியதாக அந்த ஆலய நிர்வாகத்தினரால் ஊர்காவற் றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்ப ாடு செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து சம்பவத்துடன் தொடர் புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் தேசிய மக்கள் சக்தியின் தீவக அமைப்பாளர் வேல்முருகன் மயூரன் உள்ளடங்கலாக 8 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். எஞ்சியோர் தப்பிச்சென்றிருந்த நிலையில் பொலிஸ ார் அவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில் கைதுசெய்யப்பட்ட 8 பேரையும் விசாரணை செய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் வகையில் நேற்றையதினம் ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் பொலிஸார் முன்னி லைப் படுத்தியிருந்தனர்.



இதன்போது ஊர்காவற்றுறை நீதி மன்றின் நீதிவான் குறித்த 8 நபர் களையும் எதிர்வரும் 14 நாள்களுக்கு தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தர விட்டிருந்தார் .

முன்பதாக தனிமைத் தீவாக இருக்கும் இந்த ஆலயச் சூழலில் தேசிய மக்கள் சக்தியின் தீவக அமைப்பாளர் வேல்முருகன் மயூரன் உள்ளடங்கலாக 20 பேர் அடங்கிய குழுவினர் மதுபான விருந்தொன்றை முன்னெடுத்திருந்த நிலையில், ஆலயத்திற்குச் சுற்றுலா சென்றவர்களுடன் முரண்பட்டுக் கொண்ட காட்சிகளுடன் அதிகளவான மதுப்போத்தல்கள், ஆடு ஒன்றின் தலை உள்ளிட்ட பல்வேறு தடயங்களும் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# 500 கிலோ இராட்சதக் கொம்புத் திருக்கை மீன் மன்னாரின் முத்தரிப்புத்துறை கடலில் சிக்கியது

மன்னாரின் முத்தரிப்புத்துறை கடல்பகுதியில் 500 கிலோ எடையுள்ள இராட்சதக் கொம்புத் திருக்கை மீன் பிடிபட்டிருக்கின்றது.

நேற்றுக் காலை கடலுக்குச் சென்ற உள்ளூர் மீனவர்களின் மீன்பிடி வலைகளில் இந்த இராட்சதக் கொம்புத் திருக்கை சிக்கியது.

அதன் மிகப்பெரிய அளவு காரணமாக, அதை ஒரு படகில் கரைக்குக் கொண்டு வர முடியவில்லை. மற்றொரு படகின் உதவியுடன் கூட, மீனவர்களால் அதைத் தூக்க முடியவில்லை. இறுதியில் அவர்கள் அந்தத் திருக்கையை கயிறால் கட்டி தண்ணீரில் இருந்து கரைக்கு இழுத்துச் செல்ல வேண்டியிருந்தது.

பிடிபட்ட இந்த இராட்சத கொம்புத் திருக்கையைக் காண கடற்கரையில் ஏராளமான பார்வையாளர்கள் கூடியிருந்தனர்.



# அத்தியாவசிய மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்படவில்லை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

நாட்டில் மிகவும் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு பற்றாக்குறை இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவின் கலந்துரையாடலின் போதே சுகாதார அமைச்சின் அதிகாரிகள் இதனை தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடங்களில் கொள்முதல் நடவடிக்கையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக தற்போதைய மருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

எனினும் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை என்று இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில், எதிர்வரும் 2026 ஆம் ஆண்டிற்கான கொள்முதல் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், மருந்து பற்றாக்குறை விரைவில் நிவர்த்திக்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த ஆண்டு இறுதிக்குள், நாட்டில் 80 முதல் 90 சதவீதமான அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் கிடைக்கும் என சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# பட்டம் விடவேண்டாம்; மக்களிடம் கோரிக்கை

நாட்டிலுள்ள விமான நிலையங்களுக்கு அருகில் பட்டம் பறக்க விடுவதைத் தவிர்க்குமாறு பொதுமக்கள் மீண்டும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

விமான நிலையங்களுக்கு அருகில் பறக்க விடப்படும் பட்டங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக இலங்கை வான்படை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக விமான விபத்துகள் ஏற்படும் அபாயம் இருப்பதாக இலங்கை வான் படை எச்சரிக்கிறது.

இதேவேளை, விமான நிலையங்கள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பு காரணங்களுக்காக, சர்வதேச வானூர்தி நிலையங்களுக்கு அருகில் பட்டங்களை பறக்க விடுவதற்கு தடை விதிப்பதாக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் அறிவித்துள்ளது.



# ஹேமசிறி - பூஜித்துக்கு எதிரான வழக்கு செப்டம்பரில் மீண்டும் விசாரணைக்கு

2019 ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் காவல்துறை மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு செப்டம்பர் 18 ஆம் திகதியன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பில், முன்கூட்டியே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்த போதிலும், குற்றவியல் கவனக்குறைவு காரணமாக கடமையைச் செய்யத் தவறியமைத் தொடர்பில், கொழும்பு மேல் நீதிமன்றத்தின் ட்ரயல்-அட்-பார் அமர்வில் இந்த விசாரணை இடம்பெறவுள்ளது.

இந்த வழக்கின் விசாரணை நேற்று இடம்பெற்றபோது, சட்டமா அதிபர் சார்பாக முன்னிலையான பிரதி மன்றாடியார் நாயகம் சுதர்சன் டி சில்வா, நீதிபதி ஆதித்ய படபெந்திகே, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளதால், வழக்கு விசாரணைக்கு புதிய திகதியை நிர்ணயிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

முன்னதாக, மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, இந்த வழக்கின் பிரதிவாதிகளான ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பூஜித் ஜயசுந்தர ஆகியோரை விடுவித்து விடுதலை செய்திருந்தது.

இருப்பினும், சாட்சிகளை அழைக்காமல் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிப்பதற்கான மேல் நீதிமன்றத்தின் முடிவை சட்டவிரோதமானது என்று அறிவிக்கக் கோரி, சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்.

இந்த மேன்முறையீட்டை பரிசீலித்த உயர்நீதிமன்றம், புதிய விசாரணையை நடத்த வேண்டும் என்று மேல் நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டது.

இதனையடுத்தே, மேல் நீதிமன்றம் இந்த வழக்கு விசாரணையை மீண்டும் முன்னெடுத்துள்ளது.

# இலங்கையர் தினத்தைத் கொண்டாடுவதால் மட்டும் தமிழ் மக்களின் மனங்களை வென்று விட முடியாது

## கறுப்பு ஜூலை நினைவுக் கருத்தரங்கில் ஐங்கரநேசன் தெரிவிப்பு



'மகாவலி கங்கை நாடெங்கள் நாடே..!' என்று பெருமை பொங்கப் பாடியவர்கள் தமிழர்கள். 'சிங்களமும் செந்தமிழும் சேர்ந்திங்கு வாழ்வதுந்தன் பெருமையம்மா' என்று சகோதரத்துவம் பாடியவர்கள் தமிழர்கள். 'இலங்கை என்பது எம் தாய்த்திருநாடு' என்று இறுமாந்து பாடியவர்கள் தமிழர்கள். ஆனால், தமிழர்கள் தங்களை இலங்கையர்கள் என்று எவ்வளவுதான் உரத்துச் சொன்னாலும், இல்லை நீ தமிழன் என்றே பேரினவாதம் சொன்னது. தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே காலத்துக்குக் காலம் தமிழர்களுக்கெதிரான கலவரங்கள் நிகழ்த்தப்பட்டன. முள்ளிவாய்க்கால் வரை இதுவே நீண்டது. இப்போது ஆடிக்கலவர நாளில் சகோதர தினத்தை முன்னெடுத்துள்ள ஜே.வி.பி. அரசாங்கம் விரைவில் இலங்கையர் தினத்தைக் கொண்டாடவுள்ளது. ஆனால், இந்தத் தினங்களைக் கொண்டாடுவதால் மட்டும் தமிழ் மக்களின் மனங்களை வென்று விட முடியாது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜுலை நினைவுக் கருத்தரங்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

நினைவேந்தல்கள் வரலாற்றை நினைவுபடுத்துகின்றன. வரலாறு ஒருவரை எங்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றதோ அங்கிருந்துதான் அவர் தனது அடுத்த பயணத்தைத் தொடரமுடியும். நதிகளைப் போன்றே வரலாறும் பின்னோக்கிப் பாய்வதில்லை. இதுவே வரலாற்றின் நியதி. வரலாறு தமிழ் மக்களை முள்ளிவாய்க்காலில் கொண்டு வந்து நிறுத்தியது. ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட அந்த இடத்தில் இருந்துதான் அஞ்சலோட்டம் போன்று அடுத்த போராட்டத்தைத் தமிழ் மக்கள் ஜனநாயக வழியில் முன்னெடுத்திருக்க வேண்டும். முள்ளிவாய்க்கால் பேரழிவு சர்வதேச நாடுகளை எமது போராட்டத்தின் நியாயப்பாடுகளை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கான சாத்தியங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. ஆனால், அதைச் செய்யத் தவறிய எமது தலைவர்கள், மாறாக இலங்கை அரசுக்கு ஐக்கிய நாடுகள் சபையில் பிணை எடுத்துக் கொடுத்தார்கள்.

வரலாறு இன்னுமொரு சந்தர்ப்பமாகச் செம்மணியில் மனிதப் புதைகுழிகளை அடையாளப்படுத்தியுள்ளது. போரின் சாட்சிகளாக, இன அழிப்பின் சாட்சிகளாக, எம்முன்னால் பலர் இன்றும் உள்ளார்கள். இவர்களால் உயிர்ப்பயம் காரணமாக உண்மைகளை அதிகம் வெளிப்படுத்த முடியாது. உயிருள்ள சாட்சியங்களைவிட வலுவான சாட்சியங்களாக இன்று எம் முன்னே செம்மணி மனிதப்புதைகுழிகளும் அவற்றில் இருந்து வெளிப்படும் எமது உறவுகளின் எலும்புக்கூடுகளும் உள்ளன. எலும்புக்கூடுகள் தனது கழுத்தை இறுக்கப் போகின்றது என்று அஞ்சும் பேரினவாதம் இதனைத் திசை திருப்புவதற்கான சகல எத்தனங்களிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. செம்மணிப் புதைகுழிகள் தந்துள்ள அரியவாய்ப்பை எமது தலைவர்கள் சரியாகப் பயன்படுத்தி நீதிக்கான, விடுதலைக்கான எமது பயணத்தை வேகமாகத் தொடர முன்வரவேண்டும். – என்றும் தெரிவித்துள்ளார்.




# தீர்வை வரி குறைப்பு தொடர்பில் இந்த வாரமும் கலந்துரையாடல்

தீர்வை வரி குறைப்பு தொடர்பில் மற்றுமொரு தீர்மானமிக்க கலந்துரையாடல் இந்த வாரம் இடம்பெறவுள்ளது.

அமெரிக்காவினால் இலங்கைக்கு விதிக்கப்பட்ட 30 வீத தீர்வை வரியை மேலும் குறைக்கும் நோக்கில் இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகள் அலுவலக அதிகாரிகளுக்கு இடையே இந்த கலந்துரையாடல் இணைய வசதி ஊடாக நடைபெறவுள்ளது.

கலந்துரையாடல்களின் பிரதிபலன் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் என இலங்கை பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.




# மன்னார் கடற்கரையில் கரை ஒதுங்கிக் கிடக்கும் பிளாஸ்டிக் துகள்களை அகற்றும் பணி ஆரம்பம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

கேரளக் கடற்பரப்பில் பிளாஸ்டிக் துகள்களை ஏற்றிச் சென்ற கப்பல் கடந்த மே மாதம் 25 ஆம் திகதி மூழ்கிய நிலையில் அந்தக் கப்பலில் காணப்பட்ட பிளாஸ்டிக் துகள்கள் தற்போது மன்னார் மாவட்டத்தின் கடற்கரையோரங்களில் கரை ஒதுங்கி வருகின்றன.

இந்த நிலையில் கரை ஒதுங்கித் தேங்கி கிடக்கும் பிளாஸ்டிக் துகள்களை அகற்றும் செயல்பாடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் திங்கட்கிழமை மன்னார் சௌத்பார், கீரி. தாழ்வுபாடு கடற்கரை பகுதிகளில் பிளாஸ்டிக் துகள்களை அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் தெரிவு செய்யப் பட்ட மக்களைப் பயன்படுத்தி, அவர்க ளுக்கு நாளாந்தக் கொடுப்பனவு ஒன்றை வழங்கி இந்த நடவடிக்கையை மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

கடல் சூழலையும்,கடல்வாழ் உயிரினங்களையும் பாதுகாக்கும் வகையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடல்சார் பாதுகாப்புச் சூழல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் நேற்றுத் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்றது.

இந்த ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன். மன்னார் பிரதேசச் செயலாளர் எம். பிரதீப், கடல்சார் பாதுகாப்பு சூழல் திணைக்கள பிரதி நிதிகள்,பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.













# வட,கிழக்கில் வெறுமையான நிலங்களினால் சிங்கள குடியேற்றங்களை ஈர்க்கும் ஆபத்து!

## எச்சரிக்கின்றார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்

தமிழர்கள் புலம் பெயர்ந்து செல்லும் நிலைமை அதிகரித்து செல்கிறது. இனத்தின் அளவு குறைந்து செல்கிறது. நிலம் வெறுமையாக இருப்பது அதிகரித்துச் செல்கிறது. இது ஆபத்தானது. வடக்கு –,கிழக்கில் நிலங்கள் வெறுமையாக உள்ளமை சிங்களக் குடியேற்றங்களை உள் இழுப்பதற்கு வழி கோலுகிறது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

1983 கறுப்பு ஜுலையின் போது வெலிக்கடை சிறையில் படுகொலைப் பட்டவர்களின் நினைவு நிகழ்வு கடந்த சனியன்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவரங்கில. நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய சமயம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1983 ஜுலையில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டது பெரும் இன அழிப்பு. அதற்கும் முன்னரும் இந்த நாட்டில் தமிழர்கள் இரண்டாம் தர பிரஜைகளாகவே நடத்தப்பட்டனர். அவர்கள் ஒடுக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையில்தான் ஆட்சியில்

இருந்தவர்கள் நடந்து கொண்டனர். அதற்கு செயல்வடிவம் கொடுத்தவர்தான் ஜே.ஆர்.ஜெயவர்தனா.

அண்மையில் ரயிலில் ஒரு குழு சகோதாரத்துவ கோசத்தடன் வந்தது. இதனைப் பார்த்த எனக்கு இப்பவும் ஒரு விடயம் நினைவில் இருக்கிறது.

அன்று ரயிலில் வந்த சிறில் மத்யூவின் காடையர்கள் குழு யாழ் நகரை அழித்தது. அன்று தமிழர்களுக்கு எதிராக வன்முறைகளை மேற்கொண்டவர்கள் ஜே.வி.பியினர்தான் என்று அப்போது ஜே.ஆர். சொன்னார்.

அன்றைய ஆட்சியாளர்களின் இருப்பிடம் அதே நிலைப்பாட்டில்தான் இன்றைய ஆட்சியாளர்கள் உள்ளனர்.

1983 இற்கு பின்னர்தான் தமிழ் இளைஞர்கள் மத்தியில் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகவும், அதன் இராணுவத்திற்கு எதிராகவும் போராட வேண்டும் என்ற உத்வேகம் அதிகரித்தது. வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயகம். அங்குதான் அவர்களுக்கு பாதுகாப்பு என உணர்த்தி



யதும்1983தான்.

வடக்குக் கிழக்குக்கு வெளியே இருந்த தமிழ் மக்கள் – குறிப்பாக எதுவுமே அறியாத மலையக மக்கள் – சிங்கள வன்செயல்களால் பாதிக்கப்பட்டு வடக்கு, கிழக்கு நோக்கி வந்தார்கள். அங்குதான் தமிழர்களுக்கு பாதுகாப்பு எனக் கருத்தினார்கள்.

இந்த நிலைமையில்தான் வடக்கு, கிழக்கில் தமிழர் தாயகத்தை உருவாக்க வேண்டும் என்ற,நோக்கில் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் ஒன்று சேர்ந்து பல இயக்கங்களாக

போராட்டத்தை முன்னெடுத்தனர். ஆனால் துரதிஷ்டவசமாக இந்தப் போராட்டம் 2009 இல் மௌனித்து விட்டது.

ஜனநாயக போராட்டம் பின்னர் 30 வருட ஆயுத போராட்டம், அதற்கு பின்னராகஷஇந்த15 வருட காலத்தில் நாம் பல அனுபவங்களை சந்தித்திருக்கின்றோம். ஆனால்இந்த அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டு அதிலிருந்து முன்னேறப் போகின்றோமாக என்றால் அது சந்தேகத்திற்குரியதே. தமிழ் அரசியலின் பலவீனம் இதுதான். இனத்தின் நலன் கருத்தி நாம் ஒரணியில் இணைவது கிடையாது. அப்படி யாரேனும் இணைந்தால் அதனை எப்படி சீர் குலைக்கலாம் என சிலர் கங்கனம் கட்டிக்கொண்டு நிற்பார்கள். கடந்த காலப் போராட்ட வரலாறுகள் தெரியாத பலர்தான் இன்று புதிய வரலாறுகளை எழுதுகின்றார்கள். சிலர் கையில் கமரா இருந்தால் போதும், எதையும் எழுதலாம் என்ற நிலைமை தற்போது உருவாகியுள்ளது. யாரும் யாரையும் துரோகி என முத்திரை குத்தி சமூக வலைத் தளங்களில் பரப்புரை செய்யலாம்.

அதனை நம்பும் ஒரு பகுதியினரும் எங்கள்மத்தியில்வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றனர்.

தமிழ் தரப்பின் பலவீனத்தால் தென்னிலங்கையில் ஆட்சிக்கு வருகின்றவர்கள் மிகவும் உற்சாகமாக இருக்கின்றார்கள். நாங்கள் ஒரு போதும் ஒத்த கருத்துடன் நிற்கப் போவதில்லை என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். இதனையே மூத்த ஊடகவியலாளர் தனபாலசிங்கம் அவர்களும் குறிப்பிட்டிருந்தார். ஒற்றுமையை குலைப்பவர்கள் எங்களுக்குள்தான் இருக்கின்றார்கள். ஆனால் இவற்றையெல்லாம் கடந்து தமிழ் மக்களின் நலன்கருத்தி தமிழ் மக்கள் கௌரவமாகவும், நிம்மதியாகவும், சுயாதீனமாகவும் வாழக்கூடிய சூழலை நோக்கிச் செல்ல வேண்டும். இனத்தின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய எங்கள் எல்லோருக்கும் சுயநிர்ணய அடிப்படையில், இணைந்த வடக்கு – கிழக்கில் சுயாட்சி அமைய வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது. ஆனால் இனி அதற்கான சூழல் இருக்கிறதா என்று சிந்திக்க வேண்டும். ஆயுத போராட்டத்தில் ஒரு சிறு கீறலைக் கூடசந்திக்காதவர்கள் இன்று மற்றவர்களை துரோகி என்கிறார்கள். ஏமாற்று அரசியலைச்செய்கின்றார்கள். இது தமிழ் மக்களுக்கு எந்தவித்திலும் விமோ சனத்தை ஏற்படுத்தித் தரப் போவதில்லை.

தமிழர்கள் புலம் பெயர்ந்து செல்லும் நிலைமை அதிகரித்துச் செல்கிறது. இனத்தின் அளவு குறைந்து செல்கிறது. நிலம் வெறுமையாக இருப்பது அதிகரித்துச் செல்கிறது. இது ஆபத்தானது. வடக்கு கிழக்கில் நிலங்கள் வெறுமையாக உள்ளமை சிங்களக் குடியேற்றங்களை உள் இழுப்பதற்கு வழி கோலுகிறது. தமிழ் தேசியத்தைப் பாதுகாப்பதாக கூறிக்கொள்ளும் தரப்பினர்கள் உண்மையாகவே அதற்கு எதிராகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே நமது தமிழர் தரப்பில் மாற்றம் வேண்டும். நாம் யதார்த்திற்கு ஏற்ப எங்களது செயற்பாடுகளை முன்னெடுப் பதே இன விடுதலைக்காகத் தங்களை இழந்த எங்களது மூத்த தலைவர்களுக்கு நாம் செய்யும் உண்மையான கடமை யாகும். – எனத் தெரிவித்தார்.



# ‘மக்களுடன் ஊராட்சி’ எனும் பெயரில் வவுனியாவில் நேற்று நடமாடும் சேவை

(கி.வசந்தன்)

‘மக்களுடன் ஊராட்சி’ எனும் தொனிப்பொருளில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் முதலாவது நடமாடும் சேவை நேற்று கந்தபுரம் வட்டாரத்தில் இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவை மூலமாக விளம்பரப்பலகை கட்டணம், சோலை வரி, ஆதனப்பெயர் மாற்றம் ஆலோசனைகள், எல்லைக்கோட்டு சான்றிதழ் சேவை, வியாபார உரிமம், வியாபார வரி, வியாபார பெயர்ப்பதிவு, வழி அனுமதிப்பத்திர ஆலோசனைகள், கட்டட அனுமதி ஆலோசனைகள், கழிவகற்றல் சேவை, வீதி விளக்கு கோரிக்கைகள், ஆயுர்வேத மருத்துவ சேவை, நூலக நடமாடும் சேவையும் அங்கத்துவ படிவம் வழங்கலும், முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளல், தலைவர் மற்றும் உறுப்பினர்களுடனான சந்திப்பு, 2026ம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்ட முன்மொழிவுகள் பெறல் உள்ளிட்ட மேலும் பல சேவைகளைப் பெற்றுக்கொள்ளவதற்காக வட்டார மக்கள் வருகை தந்திருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

கத்தபுரம் வட்டாரத்திற்குட்பட்ட தோணிக்கல் கிராம் அபிவிருத்தி சங்கத்தில் இடம்பெற்ற இந்நடமாடும் சேவையில் தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் பா.பாலேந்திரன், பிரதி தவிசாளர் பா.கோணேஸ்வரி மற்றும் உறுப்பினர்கள், பிரதேச சபை அலுவல்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.






















# மட்டக்களப்பில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு கிழக்கு ஆளுநரினால் 43.2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## முதற்கட்டமாக 65 பேருக்கு காசோலைகள் நேற்று வழங்கி வைப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் 'நாடே முதன்மை' எனும் தொனிப்பொருளுக்கு அமைய வீடுகள் சேதமடைந்தவர்களின் வீடுகளைப் புனர் நிர்மாணிப்பதற்கு முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 65 பேருக்கு 60 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவுக்கான காசோலை நேற்று திங்கட் கிழமை வழங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட காரியாலயத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பகுதியளவில் சேதமடைந்துள்ள 216 வீடுகளைப் புனர்நிர்மான செய்வதற்கு 43.2 மில்லியன் ரூபா நிதி கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவினால் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதில் முதற்கட்டமாக மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 65 பேருக்கான காசோலை வழங்கம் நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநரின் வழிகாட்டலில் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட காரியாலயத்தின் பொறியியலாளர் எஸ்.வினோராஜ் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதில் அதிதிகளாக கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தவிசாளர் பொறியியலாளர் வீ.சுகுமாரன், தேசிய மக்கள் சக்தியின் சுற்றுலா துறை அமைச்சின் மாவட்ட இணைப்பாளரும் மாநகர சபையின் உறுப்பினருமாகிய வனிதா செல்லப்பெருமாள், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட காரியாலயத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் செல்வி யதுசாயினி சுதாகரன் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பகுதியளவில் சேதமடைந்த வீடுகளை புனரமைக்க 57 பேருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் 57 இலட்சம் ரூபாவும், இரண்டாம் கட்ட கொடுப்பனவு பெறும் எட்டு பயனாளிகளுக்கு தலா 40 ஆயிரம் ரூபா வீதழ் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் காசோலைகளாக பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.







# பா.ஜ.கவும் தி.மு.கவும் இணைந்து அரசியல் நாடகம் நடத்துகின்றன

## விஜய் விமர்சனம்



மறைமுகமாக ஓரணியில் உள்ள பா.ஜ.கவும் தி.மு.கவும் இணைந்து நடத்தும் அரசியல் ஆதாய நாடகத்தை இனியும் தமிழக மக்கள் ஏற்கமாட்டார்கள் என்று தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவர் விஜய் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

"75 ஆண்டுகளைக் கடந்த கட்சி என்றும் தமிழ், தமிழர் அடையாளம் என்றாலே அது தங்களுக்கு மட்டுமே உரியது என்பது போலவும் பொய்யாக மார்தட்டிக்கொள்ளும் தற்போதைய ஆளும் கட்சியான தி.மு.க, தமிழர் பெருமையான சோழப் பேரரசர்களுக்கு உரிய மரியாதையை முன்பே முழுமையாக அளித்திருந்தால் இப்போது தமிழர்களுக்கு எதிராக இருக்கும் மத்திய பா.ஜ.க. அரசு இதைக் கையில் எடுத்திருக்காது.

இதையெல்லாம் செய்யாமல், பிரதமர் வருகை தமிழ்நாட்டுக்குப் பெருமை என்று வாஞ்சையாகச் சொல்லிச் சிலாகித்தது இந்த வெற்று விளம்பர மாடல் தி.மு.க. அரசு. சோழப் பேரரசின் பெருமையைக் கொண்டாட வேண்டியது தங்கள் கடமை என்பதை மறந்து, மத்திய பா.ஜ.க. கையில் அடைக்கலம் புகுந்து தமிழகத்தை அடகு வைத்தது போலவே இப்போது தமிழர்களின் பெருமையையும் அடகு வைத்துள்ளது தி.மு.க. அரசு.

கீழடியில் கிடைத்த அசைக்க முடியாத ஆதாரங்களை மறைத்து, தமிழர் நாகரிகத்தையும் வரலாற்றையும் மூடி மறைக்க முயலும் மத்திய பா.ஜ.க. அரசு, இப்போது இங்கு வந்து சோழர்களின் பெருமை பற்றிப் பேசி உள்ளது, முழுக்க முழுக்கக் கபட நாடகமன்றி வேறென்ன?

ஏற்கெனவே, அரசியலில் கபட நாடகம் போடுவதையே இயல்பாகக் கொண்ட தி.மு.க, இப்போது மத்திய பா.ஜ.க. அரசின் கபட நாடகத்துக்கு தாள் பணிந்து வணங்கி, தங்கள் மறைமுக உறவினருக்கு விசுவாசத்தைக் காட்டி உள்ளது. எதிர் எதிராக இருப்பது போல காட்டிக்கொண்டே, உள்ளுக்குள் மறைமுகமாக இணைந்து ஓர் அரசியல் நாடகத்தினை அரங்கேற்றும் திமுகவையும் பா.ஜ.கவையும் ஓரணியில் கபடதாரிகள் என்றுதானே அழைக்க வேண்டும்?

நாம் இப்படிச் சொல்வது, மறைமுகமாக ஓரணியில் இணைந்து இருக்கும் இவ்விரு கபடதாரிகளுக்கும், மக்களுக்குத் த.வெ.க. உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறதே என்ற வகையில் எரிச்சல் ஏற்படலாம். அதற்கு என்ன செய்ய? உண்மை ஒருநாள் அம்பலமாகத்தானே செய்யும். அரசியலில் தன் இரண்டாம் ஆண்டில் பயணிக்கும் தமிழக வெற்றிக் கழகமே, தமிழக வரலாற்றுப் பெருமைகளின் மீது பெரும் அக்கறை கொண்ட பேரியக்கம்.

சேர, சோழ, பாண்டியர்கள் ஆட்சியின் தொன்மப் பெருமைகளைப் பறைசாற்றும் பிரமாண்டமான அருங்காட்சியகம் ஒன்று சென்னையில் அமைக்கப்பட வேண்டும் என்று சென்ற ஆண்டிலேயே த.வெ.க. தீர்மானம் இயற்றியது. ஆனால், பவள விழாக் கண்ட இந்த தி.மு.கவோ, பா.ஜ.க. முதுகுக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டு பம்முகிறது. கொள்கை, கோட்பாடுகளுடன் அறிஞர் அண்ணா ஆரம்பித்த இயக்கம், இன்று அனைத்திலும் சமரசம் செய்துகொண்டு, தமிழுக்கும் தமிழர்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் எதிராக உள்ள பா.ஜ.கவிடம் சரணடைந்து கிடப்பதுதான் வேடிக்கை. இல்லை இல்லை. இதுதான் தி.மு.க. தலைமைக் குடும்பத்தின் வாடிக்கை.

மறைமுகமாகப் பா.ஜ.கவும் தி.மு.கவும் ஓரணியில் இருக்கும் கபடதாரிகளாக இணைந்து நடத்தும் அரசியல் ஆதாய நாடகத்தை இனியும் தமிழக மக்கள் ஏற்கமாட்டார்கள். இவர்கள் இருவரின் மறைமுகமான கபட நாடக அரசியலுக்கான தக்க பதிலடியை 2026 தேர்தலில் தமிழக மக்கள் உறுதியாகத் தருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தானுக்கு எதிரான போரை நிறுத்தியது ஏன்


## மக்களவையில் ராஜ்நாத் சிங் விளக்கம்

பாகிஸ்தானுடனான போரை நிறுத்தியது ஏன் என மக்களவையில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் விளக்கமளித்துள்ளார். மேலும், ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்தும் அவர் அவையில் விரிவான பதிலளித்தார்.

மக்களவை நேற்று தொடங்கியது முதலே எதிர்க்கட்சிகளின் அமளியால் பலமுறை ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில், மக்களவையில் பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் மற்றும் ஒபரேஷன் சிந்தூர் குறித்த விவாதத்தை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்து பேசினார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

"பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய இராணுவம் நடத்திய ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் 22 நிமிடங்களில் 100 இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். இந்திய ஆயுதப்படை ஒன்பது பயங்கரவாத தளங்களின் மீது துல்லியமான தாக்குதல்களை நடத்தியது.

மே 10 ஆம் திகதி, பாகிஸ்தானில் உள்ள பல விமானநிலையங்களில் இந்திய விமானப்படை கடுமையாகத் தாக்கியபோது, பாகிஸ்தான் தோல்வியை ஒப்புக்கொண்டு, போர் நிறுத்தத்துக்கு முன்வந்தது. அப்போது, இந்த நடவடிக்கை இடைநிறுத்தப் பட்டுள்ளது என்ற எச்சரிக்கையுடன் போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டோம். எதிர்காலத்தில் பாகிஸ்தானின் தரப்பில் ஏதேனும் தவறு நடந்தால், இந்த நடவடிக்கை மீண்டும் தொடங்கப்படும்.




ஒபரேஷன் சிந்தூர் என்பது பிரதேசத்தைக் கைப்பற்றவோ அல்லது போரை தூண்டவோ தொடங்கப்படவில்லை, மாறாக சமீபத்திய பயங்கரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதி வழங்கவும், பாகிஸ்தானை தளமாகக் கொண்ட பயங்கரவாத உள்கட்டமைப்பை அழிக்கவும் தொடங்கப்பட்டது. பாகிஸ்தான் பல ஆண்டுகளாக வளர்த்து வந்த பயங்கரவாதக் குழுக்களை ஒழிப்பதே ஒபரேஷன் சிந்தூரின் நோக்கம்.

எங்களின் இராணுவ நோக்கத்தை அடைந்ததால் போரை நிறுத்தினோம். எந்தவொரு அழுத்தத்தாலும் இந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டது என்று கூறுவது ஆதாரமற்றது, முற்றிலும் தவறானது. எனது அரசியல் வாழ்க்கையில், நான் எப்போதும் பொய்களைப் பேசுவதில்லை.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் நமது விமானங்களில் எத்தனை சுட்டு வீழ்த்தப்பட்டன என்று கேட்கிறார்கள். அவர்களின் கேள்வி நமது தேசிய உணர்வுகளைப் போதுமான அளவு பிரதிபலிக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். நமது ஆயுதப் படைகள் எத்தனை எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தின என்ற கேள்வியையே அவர்கள் கேட்க வேண்டும். இந்தியா எதிரிகளின் பயங்கரவாதத் தளங்களை அழித்ததா என்றால், பதில் ஆம் என்பதுதான். நீங்கள் ஒரு கேள்வி கேட்பதாக இருந்தால், இந்த நடவடிக்கையில் நமது துணிச்சலான வீரர்கள் யாராவது பாதிக்கப்பட்டார்களா என்பது தான். இதற்கான பதில், இல்லை என்பதுதான். நமது வீரர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை." - என்றார்.

# நிபந்தனையற்ற போர் நிறுத்தத்துக்கு தாய்லாந்து - கம்போடியா ஒப்புதல்

## மலேசிய பிரதமர் தகவல்



தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகள் நிபந்தனையற்ற உடனடி போர்நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளன என மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்

தாய்லாந்தின் தற்காலிகப் பிரதமர் பும்தம் வெச்சயாசாய் மற்றும் கம்போடியாவின் பிரதமர் ஹன் மானெட் ஆகியோர் நேற்று மலேசியாவின் புத்ரஜெயாவில் உள்ள பிரதமர் அன் வரின் அதிகாரப்பூர்வ இல்லத்தில் போர்நிறுத்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

கம்போடியா மற்றும் தாய்லாந்து தலைவர்களுடன் இணைந்து பேசிய மலேசிய பிரதமர் அன்வர், "கம்போடியா மற்றும் தாய்லாந்து இடையே மிகவும் நேர்மறையான முன்னேற்றத்தை காணும் வகையில் நல்ல முடிவுகளை நாங்கள் கண்டிருக்கிறோம்." என்று அறிவித்தார்.

அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் தலைவர்களுடனும் இணைந்து மோதலுக்கு அமைதியான தீர்வைக் காண மலேசியா நெருங்கிய தொடர்பில் உள்ளது என அன்வர் கூறினார். நேற்று நள்ளிரவு அமுலுக்கு வரும் வகையில் கம்போடியாவும் தாய்லாந்தும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அன்வர் தெரிவித்தார். இது இரு நாடுகளுக்கு இடையேயான பதற்றத்தைத் தணிப்பதற்கும், அமைதி மற்றும் பாதுகாப்பை மீட்டெடுப்பதற்குமான நடவடிக்கையில் முதல் படியாகும் என்றும் அன்வர் கூறினார்.

கடந்த வியாழக்கிழமை எல்லையில் ஏற்பட்ட கண்ணிவெடி தாக்குதலில் 5 தாய்லாந்து வீரர்கள் காயமடைந்ததைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே மோதல் வெடித்தது. மோதல்களைத் தொடங்கியதற்காக இரு தரப்பினரும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டி வருகின்றனர். 5 ஆவது நாளாக நீடிக்கும் இந்த போரில் இரு தரப்பிலும் இதுவரை 35 பேர் உயிரிழந்தனர். இரு தரப்பிலும் 2,60,000 இற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்த்துள்ளனர். இரு நாடுகளும் தங்கள் தூதர்களை திரும்ப பெற்றதுடன், இரு நாடுகளுக்கு இடையிலான அனைத்து எல்லைகளும் மூடப்பட்டுள்ளன.



# ரஷ்ய விமான நிறுவனத்தில் குளறுபடி; பல விமான சேவைகள் நேற்று இரத்து

ரஷ்ய விமான நிறுவனமான ஏரோஃப்ளோட், அதன் தகவல் அமைப்புகளில் ஏற்பட்ட குளறுபடிகளுக்கு பின்னர் நேற்று பல விமான சேவைகளை இரத்து செய்தது.

பிரச்சினைக்கான காரணம் அல்லது அதைத் தீர்க்க எவ்வளவு காலம் ஆகும் என்பது குறித்து தேசிய விமான நிறுவனம் மேலதிக விவரங்களை வழங்கவில்லை.

பெப்ரவரி 2022 இல் ரஷ்யா, உக்ரைனில் போரைத் தொடங்கியதிலிருந்து, ரஷ்யாவில் பயணிகள் விமான இடையூறுகளுக்குப் பழக்கமாகிவிட்டனர். இருப்பினும், அந்த தாமதங்கள் பொதுவாக ட்ரோன் தாக்குதல்களுக்குப் பிறகு தற்காலிக விமான நிலைய மூடல்களால் ஏற்படுகின்றன.

விமான அட்டவணையில் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்கும் சாதாரண சேவை நடவடிக்கைகளை மீட்டெடுப்பதற்கும் நிபுணர்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர்" என்று ஏரோஃப்ளோட் தெரிவித்தது.

டெலிகிராமில், ரஷ்யா முழுவதும் உள்ள இடங்களுக்கும், பெலாரஷ்ய தலைநகர் மின்ஸ்க் மற்றும் ஆர்மீனிய தலைநகர் யெரெவனுக்கும் ரத்து செய்யப்பட்ட 40 இற்கும் மேற்பட்ட விமானங்களை பட்டியலிட்டுள்ளது.

மொஸ்கோவின் ஷெரெமெட்டியேவோ விமான நிலையத்திலிருந்து விமானங்கள் ரத்து செய்யப்பட்ட பயணிகள் தங்கள் செக்-இன் பொருட்களை மீட்டெடுத்து வெளியேறுமாறு ஏரோஃப்ளோட் வலியுறுத்தியது.

விமான நிலையத்தில் குழப்பமான காட்சிகள் நிலவுவதாகவும், பயணிகள் வெளியே வர வரிசையில் நின்றதால் நெரிசல்கள் ஏற்பட்டதாகவும் பாசா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

உக்ரைனில் நடந்த போருக்காக ரஷ்யா மீது விதிக்கப்பட்ட தடைகள் இருந்தபோதிலும், பயண மற்றும் வழித்தடங்களை கடுமையாக மட்டுப்படுத்திய ஏரோஃப்ளோட், பயணிகள் எண்ணிக்கையின் அடிப்படையில் உலகளவில் முதல் 20 விமான நிறுவனங்களில் ஒன்றாக உள்ளது.

2024 ஆம் ஆண்டில், ஏரோஃப்ளோட் குழுமத்தின் பயணிகள் போக்குவரத்து 55.3 மில்லியன் பயணிகளை எட்டியதாக விமான நிறுவனத்தின் வலைத்தளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 29.07.2025




இன்றைய நாள் ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். திறம்பட அறிந்து உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். தியானம் மேற்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

இன்று பணியில் வெற்றி காண்பீர்கள். சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். அதனை சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையிலான உறவில் நல்ல பிணைப்பு காணப்படுகின்றது.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். கூடுதல் பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

தேக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். இதனால் சிறந்த ஆரோக்கியம் பராமரிக்கப்படும்.




முன்னுரிமைப்படி செயல்களை செய்வதற்கு மனதில் தெளிவு கொள்ளுங்கள். விழிப்புணர்வுடன் செயல்களைச் செய்து வளர்ச்சி காண்பீர்கள்.

பணியில் புதிய வாய்ப்புகள் உற்சாகத்தை அளிக்கும். உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள்.

நெருங்கிய உறவினர் ஒருவரிடமிருந்து உங்களுக்கு பயனுள்ள ஆலோசனை கிடைக்கும். அது உங்கள் தாய் அல்லது தந்தையாகக் கூட இருக்கலாம். அதன் மூலம் உங்களுக்கு பலன் கிடைக்கும்.

நிதி விஷயங்கள் இன்று சிறப்பாக காணப்படும். உங்களால் சேமிக்க இயலும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சனை காணப்படாது.




இன்று உங்கள் திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெறுவீர்கள். சிறப்புடன் செயலாற்ற மனதில் தெளிவு தேவை.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். அவர்களிடமிருந்து தக்க சமயத்தில் ஆதரவு கிடைக்கப்பெறுவீர்கள். அதன் மூலம் வளர்ச்சி காண்பீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை கழிப்பதன் மூலம் மன நிறைவைக் காண்பீர்கள்.

இன்று நிதி விஷயங்களுக்கு சாதகமான நாள். உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ள நாள்.

தொடைகளில் விறைப்புத் தன்மை ஏற்பட




இன்று உங்கள் செயல்களில் மிகுந்த அக்கறை காட்ட மாட்டீர்கள். அதிர்ஷ்டத்தை நம்பாமல் சிறந்ததை செயலாற்ற முயலுங்கள்.

பணியில் திருப்திகரமான நிலை இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் சுமுகமான உறவு காணப்படாது. தேவையற்ற பேச்சுகளைத் தவிர்க்கவும்.

இன்று காதலுக்கு ஏற்ற நாள் அல்ல. உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள முடியாவிட்டால் பொறுமை இழக்காதீர்கள். இனி வரும் நாட்கள் சிறந்த நாட்களாக இருக்கும் என்று நம்புங்கள்.

நிதி விஷயங்களுக்கு இன்று சிறந்த நாளாக இல்லாத காரணத்தால் உங்களிடம் உள்ள பணத்தை வைத்து சமாளிக்க வேண்டும்.




உங்கள் முடிவுகளை செயலாற்றுவதில் உறுதியாக இருப்பீர்கள், மனதில் உள்ள குழப்பத்தை நீக்கி விடுங்கள். உங்கள் முடிவுகளை, கவனமாக திட்டமிட்டு செயலாற்றுவது நன்மை தரும்.

உங்கள் பணிக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் இருக்க வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க முயற்சி செய்யுங்கள்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை இருக்காது. அது உங்களுக்கு கவலையாக இருக்கும்.

மனதில் காணப்படும் உற்சாகம் காரணமாக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சிறப்பான நாள். உங்களின் மனநிலையை சிறப்பாக பராமரித்து தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் வெற்றி கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு சீராக இருக்கும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது.




உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். அதற்கான நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் பணியில் மாறுதல்கள் நேரலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருக்கும். நீங்கள் பணியில் மும்மரமாக செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்களின் சிறந்த உணர்வுகளை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதி சம்பந்தமான பிரச்சினைகள் பாதிப்பை ஏற்படுத்தாது. நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. கால் வலியால் அவதிப்பட நேரும்.




இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். உங்கள் ஆக்கப்பூர்வமான செயல்பாட்டை பாதிக்கும் பதற்றத்தை கைவிடுங்கள்.

இலக்குகளை அடைவதற்கும் வெற்றியைப் பெறுவதற்கும் முறையாக திட்டமிடவேண்டியது அவசியம்.

திருமண திட்டங்கள் பற்றிய உரையாடல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள். இன்று காதலுக்கு ஏற்ற நாள் அல்ல.

பணத்தை கவனமாக கையாள வேண்டும். பண இழப்பு அல்லது பணம் திருட்டுப் போகலாம்.

உங்கள் தாயின் உடல்நிலை பற்றி கவலைப்படுவீர்கள். அந்த வகையில் செலவுகள் ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.07.2025




இன்று சிறந்த நாளாக இருக்காது. அசௌகரியங்கள் காணப்படும். புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. பணியில் உங்கள் நேர்மை பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற மோதல்கள் ஏற்படலாம். அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமானதாக இல்லை. தேவையற்ற செலவுகளை கண்காணிக்கவும்.

இன்று அஜீரணம் மற்றும் வயிற்று உப்பசம் போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். உண்ணும் உணவில் கவனம் கொள்ளுங்கள்.




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். உங்கள் சுய முயற்சி மூலம் கடினமாக உழைத்து வெற்றி பெறுவீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சூழ்நிலையை திறமையாக கையாண்டு சவால்களை சமாளிக்க வேண்டும். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் அணுகுமுறை உங்கள் பிரியமானவரின் பாராட்டைப் பெறும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. நீங்கள் கணிசமாக சேமிப்பீர்கள்.

கால் வலி மற்றும் தொடை வலி தவிர வேறு எந்த ஆரோக்கியப் பிரச்சினையும் இருக்காது. என்றாலும் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.




விரக்தியான மன நிலையை தவிர்த்துவிட்டு மனதை மகிழ்ச்சியாக, அமைதியாக வைத்துக்கொள்ளுங்கள் பணியில் கூடுதல் சுமைகள் காணப்படும். பணியிடச் சூழல் மகிழ்ச்சியை அளிக்காது.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று பண வளர்ச்சி குறைந்து காணப்படும். பணம் சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மியை தவிர்த்திடுங்கள். அது உங்கள் ஆரோக்கியத்தைக் கெடுக்கும்.




இன்று விவேகத்துடன் யோசித்து செயல்பட வேண்டும். கடந்த காலத்தைப் பற்றிய யோசனையைத் தவிர்க்க வேண்டும். சாதகமற்ற சூழ்நிலையையும் சமாளித்து அதனை உங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். எனவே திட்டமிட்டு பணியாற்றுங்கள். அதிகரிக்கும் பணிச்சுமை காரணமாக வேறு வேலை தேடுவீர்கள்.

இன்று நீங்கள் காதலை எளிதாக எடுத்துக்கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. கூடுதல் செலவினங்களை சந்திக்க நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சாதரணமாக இருக்கும். என்றாலும், ஆரோக்கியத்தில் சில அசௌகரியங்கள் உங்கள் வளர்ச்சியை பாதிக்கும்.

# யாழ்.பல்கலையில் இன்று ‘தொழிற் சந்தை 2025’

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களுக்கான உள்ளகத் தொழில்சார் பயிற்சிகளை வழங்க முன்வரும் நிறுவனங்களை அடையாளங்காணும் நோக்குடனும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரிகளுக்கான நிரந்தர, தற்காலிக, முழுநேர மற்றும் பகுதிநேர வேலை வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களை அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொடுக்கும் இலக்குடனும் ‘தொழிற் சந்தை 2025’ இன்று செவ்வாய்க்கிழமையன்று விஞ்ஞான பீடத்தில் நடைபெறவுள்ளது.

இத்தொழிற்சந்தையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகும் விஞ்ஞான பீட தொழில் வழிகாட்டல் மையமும் இணைந்து நிகழ்த்தவுள்ளன.

அரசு முப்பதுக்கும் அதிகமான நிறுவனங்கள் பங்கேற்கும் இத்தொழிற்சந்தையில் திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்துறையினர் எனப் பல தரப்பினரும் கலந்துகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தொழிற்சந்தை மாணவர்களை சாத்தியமான வேலைவாய்ப்பாளர்களுடன் நேரடியாக இணைக்கும் வலையமைப்பை உருவாக்குவதுடன், தொழில் துறையும் கல்வித் துறையும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும். மேலும், மாணவர்களின் தொழில்முனைவு வளர்ச்சியை ஊக்குவித்து, அவர்கள் உயர்கல்வி வாய்ப்புகளை ஆராய்ந்து தெரிந்து கொள்வதற்கும் வழிகாட்டும். இது போன்ற நிகழ்வுகள் வேலைவாய்ப்பா




ளர்களுக்கும் எதிர்கால திறமையான பணியாளர்களை அடையாளம் காணும் ஒரு பயனுள்ள சந்தர்ப்பமாக அமைகின்றன.

‘தொழிற் சந்தை 2025’இன் தொடக்க விழாவில், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றார்.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில், விஞ்ஞான பீடத்தில் நான்காம் மற்றும் மூன்றாம் வருடத்தில் கல்வி கற்கும் மாணவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பீடத்தில் பட்டங்கள் பெற்று வேலை வாய்ப்புக்களுக்காகக் காத்திருக்கும் பட்டதாரிகளும் நேரடிப் பயனாளிகளாக இணைந்துகொள்ளவிருக்கின்றனர்.